பக்கங்கள் : எட்டு

உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 புரட்டாதி 08 செவ்வாய்க்கிழமை (25.09.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 299

தமிழரின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க

ஐ.நா. பொதுச் சபையிடம் புலிகள் கோரிக்கை

62ஆவது கூட்டத் தொடரை ஒட்டி அரசியல்துறை அறிக்கை

கிளிநொச்சி, செப்ரெம்பர்25

★ ஈழத்தமிழ் மக்களின் இறைமை என்ற கோட்பாட்டை ஏற்று அந்தக் கோட்பாட்டின் அடிப்படையில் அமைதி முயற்சிகள் இலங்கையில் தொட ஆதரவளியுங்கள்!

★ கிழக்குத் திமோரிலும், கொசோவோவிலும் உள்ள மக்களுக்கு அளித்தமை போல ஈழத்தமிழ் மக்களும் தங்களின் அபிலாஷைகளை வெளிப்படுத்துவதற்கான பொருத்தமான வாய்ப்பை அளியுங்கள்.

-இவ்வாறு சர்வதேச சமூகத்தைப் பகிரங்கமாக அறிக்கை ஒன்றின் மூலம் கோரியிருக்கின்றது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம்.

அதேசமயம், இலங்கை அரசு தனது பொய் வேடத்தைக் கலைத்து, தமிழர்களுக்கு எதிரான இராணுவ அடக்குமுறையை நிறுத்தி, இன ஒழிப்பு மற்றும் மனித உரிமை மீறல் நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டுவந்து, ஈழத்தமிழ் மக்களின் நீதியான அபிலாஷைகளை ஏற்று, தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தீர்வு ஒன்றைக் காண முன்வர வேண்டும். இலங்கை அரசை இந்த வழி முறைக்கு சர்வதேச சமூகம் கொண்டுவர வேண்டும்- என்றும் விடுதலைப் புலிகள் அமைப்பு கோரியிருக்கின்றது.

ஐ.நா. பொதுச்சபையின் 62ஆவது கூட்டம் இன்று நியூயோர்க்கில் ஆரம்பமாவதை ஒட்டி தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை 'தமிழ் மக்களின் இறைமையை அங்கீகரியுங்கள்!'- என்ற தலைப்பில் நேற்று விடுத்த பகிரங்க அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையின் முக்கிய அம்சங்கள் வருமாறு-

ஐ.நா. பொதுச் சபையின் 62ஆவது கூட்டத்தொடரில் பங்குபற்றுவதற்காக ஜனாதிபதி

(08ஆம் பக்கம் பார்க்க)

வடமராட்சியில் 2 மணி நேரம் ஊரடங்கு தளர்வு

யாழ்ப்பாணம்,செப்.25

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயப் பெருந்திருவிழாவின் இறுதிநாள் விழாக்களை ஒட்டி இன்று தொடக்கம் மூன்று நாள்கள் வடமராட்சிப் பிரதேசத்தில் இரவு 9 மணி முதல் அதிகாலை 4.30மணி வரை ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்படும்.

யாழ்.பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் இத்தகவலை நேற்றிரவு அறிவித்தது.

வடமராட்சிப் பிரதேசம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் வழமைபோல் இரவு7 மணிமுதல் அதிகாலை 4.30 மணி வரை ஊரடங்கு நடைமுறையில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டது. (அ-1)

கிளாலி, கட்டுக்கரைக்குளம் பகுதிகளில் நேற்று இராணுவம் - புலிகள் மோதல்!

முன்நகர்வுகள் முறியடிப்பு என அறிவிப்பு

கொழும்பு,செப். 25

தென்மராட்சி கிளாலி முன்னரங்க நிலைகளில் இருந்தும் -

மன்னார் கட்டுக்கரைக்குளம், அடைக்கலமோட்டைப் பகுதியில் இருந்தும் - விடுதலைப் புலிகளின் பிரதேசத்தை நோக்கி படையினர் நேற்று அதிகாலை முன்நகர்வு நடவடிக்கையை மேற்கொண்டனர்.

எனினும், அந்தப் பகுதிகளில் இடம் பெற்ற கடும் மோதல்களின் பின்னர் படையினரின் முயற்சிகள் முறியடிக்கப்பட்டன என்று விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

நேற்றுக்காலை 5 மணியளவில் டாங்கிகள் சகிதம் கிளாலியில் இருந்து முன்நகர்ந்த படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஒரு மணிநேரம் கடும் மோதல்கள் இடம்பெற்றன.

அந்த மோதல்களில் இழப்புகளுடன் படையினர் தமது நிலைகளுக்கும் திரும்பினர் என்றும் தமது தரப்பில் நான்கு போராளிகள் வீரச்சாவடைந்தனர் என்றும் புலிகள் அறிவித்துள்ளனர்.

இந்தச் சமரில் தமது தரப்பில் ஒருவர் உயிரிழக்க, ஐவர் படுகாயமடைந்தனர் என்றும் புலிகள் தரப்பில் இருபது பேர் உயிரிழந்தனர் என்றும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

மன்னார் - வவுனியா வீதியில்

மன்னார் - வவுனியா வீதியில் உள்ள கட்டுக்கரைக்குளம் -- அடைக்கலமோட்டைப் பகுதியில் இராணுவத்தினர் பாரிய அளவில் நேற்று அதிகாலை முன்நகர்வு நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இம்முன்நகர்வுக்கு எதிராக தமிழீழ விடுதலைப் புலிகளின் முறியடிப்பு அணிகள் தீவிர எதிர்த்தாக்குதலை நடத்தி சிறிலங்கா இராணுவத்தினருக்குப் பாரிய இழப்புக்களை ஏற்படுத்தின. பெரும் இழப்புக்களுடன் தமது பழைய நிலைகளுக்கு சிறிலங்கா இராணுவத்தினர் பின்வாங்கிச் சென்றனர். -

சிறிலங்கா இராணுவத்தினரின் இம் முன்நகர்வு நேற்றுப் பிற்பகல் 2.30 மணிக்கு முறியடிக்கப்பட்டது.

இந்த மோதலில் தமது தரப்பில் ஆறு போராளிகள் வீரச்சாவடைந்தனர் என்று புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரயன் தெரிவித்தார். இந்த மோதல் குறித்து அரச தரப்புத் தகவல் நேற்றிரவு செய்தி எழுதப்படும் வரை வெளியாக வில்லை.

இதேவேளை -

மன்னார் மாந்தைப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதல் மற்றும் பீரங்கித் தாக்குதல்களில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்; 20 படையினர் காயமடைந்தனர் என அரசுத் தரப்பு அறிவித்தது. (அ-1)

சரண் அடைவோரின் நிலை குறித்து யுனிசெவ் ஜெனிவா அதிகாரி ஆராய்வு

யாழ்ப்பாணம்,செப். 25

குடாநாட்டில் உயிர் அச்சுறுத்தல் காரணமாக நீதிமன்றங்களில் சரண் அடைவோரின் நிலை குறித்து யுனிசெவ் அமைப்பின் ஜெனிவா தலைமையக அதிகாரி இங்கு வந்து ஆராய்ந்துள்ளார்.

குறிப்பாக சரண் அடைந்துள்ள சிறுவர்கள், பெண்கள் நிலைமை குறித்து அறிவதில் அவர் கூடுதல் அக்கறை காட்டினார்.

ஜெனிவா தலைமையகத்தின் அதிகாரியான ஜோன் ஹைக்கூஸ், கொழும்பு அலுவலக அதிகாரியான கோடன் ஹரஸ்பீல்ட் ஆகியோர் கொண்ட தூதுக் குழுவே யாழ்ப்பாணம் வந்துள்ளது

இக் குழு யாழ். நீதிவான் இ.த. விக்னராஜாவை நேற்றுப் பிற்பகல் நீதிமன்றத்தில் சந்தித்து கலந்துரையாடியது.

உயிர் அச்சுறுத்தல் காரணமாக சரண் அடைந்துள்ளவர்கள் தொடர்பாகவும் குறிப்பாக சரண் அடைந்துள்ள பெண்கள், சிறுவர்கள் தொடர்பாகவும் நீதிவானிடம் அக்

(08ஆம் பக்கம் பார்க்க)

கண்காணிப்புக் குழு அதிகாரி நீதிவான் சந்திப்பு

யாழ்ப்பாணம்,செப்.25

குடாநாட்டில் வன்செயல் சம்பவங்கள் அதிகரிப்பது குறித்து யுத்தநிறுத்தக் கண்காணிப்பு குழுவின் யாழ்.அலுவலக அதிகாரி கிறிஸ்யன் குட்முன்சைன் யாழ். நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜாவுடன் நேற்றுக் கலந்துரையாடினார்.

தற்போதைய நிலைவரம் குறித்து விவரித்த நீதிவான்,உயிர்அச்சுறுத்தல் காரணமாகச் சரணடைவோர் எண்ணிக்கை அதிகரித்துவருவதால் அவர்களைத் தனியான இடம்ஒன்றில் வைத்துப் பராமரிக்க வேண்டிய நிலை தோன்றியுள்ளது என்று அவரிடம் சுட்டிக்காட்டினார். (அ-1)

பொஸ்கோவிலிருந்து 57வீத மாணவர் புலமைப்பரிசிலில் சித்தி

யாழ்ப்பாணம்,செப்.25

ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ்.புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தில் இருந்து தோற்றியவர்களில் 56.81 சதவீதமானவர்கள் புலமைப்பரிசில் தகுதிபெற்று சித்தியடைந்துள்ளனர் என்று வித்தியாலய அதிபர் அறிவித்துள்ளார்.

பாடசாலையில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய 220 மாணவர்களில் 125 மாணவர்கள் புலமைப்பரிசில் தகுதிபெற்றுள்ளனர் என்றும் -

இவர்களில் ப.மேசிகன் 186 புள்ளிகளைப் பெற்று யாழ்.மாவட்டத்தில் 2ஆம் இடத்தையும் அகில இலங்கையில் 4ஆம் இடத்தையும் பெற்றுள்ளார் என்றும் -அதிபர் மேலும் தெரிவித்தார்.

பரீட்சைமுடிவுகள் நேற்று இணையத் தளத்தில் நண்பகல் அளவில் வெளியாகின. குடாநாட்டில் உள்ள பாடசாலைகளில்

(08ஆம் பக்கம் பார்க்க)

யாழ். சட்டத்தரணிகளின் பணிப் பகிஷ்கரிப்பு முடிவு

நீதிமன்றச் செயற்பாடுகள் வழமைக்கு

யாழ்ப்பாணம், செப். 25

யாழ். மாவட்ட சட்டத்தரணிகள் தமது பணிப் பகிஷ்கரிப்பை நிறுத்தி வழமையான நீதிமன்றச் செயற்பாடுகளில் ஈடுபடுவதென ஏகமனதாகத் தீர்மானித்துள்ளனர்.

யாழ். சட்டத்தரணிகள் சங்கத் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான சாந்தா அபிமன்னசிங்கம் இதனைத் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்திலுள்ள யாழ்ப்பாணம், மல்லாகம், பருத்தித்துறை, சாவகச்சேரி, ஊர்காவற்றுறை ஆகிய நீதிமன்றங்களினதும் சட்டத்தரணிகள் நேற்றுக்காலை யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் ஒன்றுகூடல் ஒன்றை நடத்தினர். அதன்போதே பணிப் பகிஷ்கரிப்பைக் கைவிடுவதெனத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இன்று தொடக்கம் சட்டத்தரணிகள் வழமையான நீதிமன்றச் செயற்பாடுகளை

(08ஆம் பக்கம் பார்க்க)

இந்தியா சம்பியன்!

ஜொகன்னாஸ்பேர்க்,செப்25

தென்னாபிரிக்காவில் நடைபெற்று வந்த 'ருவன்ரி/20' உலகக்கிண்ண தொடரில் நேற்றுநடைபெற்ற விறுவிறுப்பான ஆட்டத்தில் இந்தியா வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது.

நேற்று இடம்பெற்ற இறுதியாட்டத்தில் பலம்வாய்ந்த அணிகளான இந்தியாவும் பாகிஸ்தானும் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய

(08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நம்பினோரைக் காத்திடவே கண்ணா! இன்று தேரேறி வாருமையா மாயவனே....

வாணி ஒகஸ்

Specialist in Wedding Sarees & Shalwar Kameez

81, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 - 2225578

81, Grand Bazar, Jaffna.
Tel.: 021 2225578

உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயில்

தேர்த்திருவிழா-2007

கருணாகரன் அடியார்களே!

எம்பெருமான் தம்மடியார் துயர் துடைக்க இன்று (25.09.2007) செவ்வாய்க்கிழமை சித்திரத் தேர் ஏறி வருகிறார். அடியார்கள் ஆசாரசீலராய் வருகை தந்து கருணாகரன் கருணைபெற வேண்டுகின்றோம்.

வசந்த மண்டபப் பூசை பி.ப ஒரு மணி

விசேட மேளக் கச்சேரி

இராசன் குழுவினர்	இணுவில்
சிவதாசன் குழுவினர்	இணுவில்
சுந்தரமூர்த்தி குழுவினர்	இணுவில்
சிவகுமார் குழுவினர்	சித்தங்கேணி
பாலமுருகன் குழுவினர்	நல்லூர்
கானமூர்த்தி குழுவினர்	இணுவில்

உரும்பிராய் (66224)

உபயகாரர்களும்
திருப்பணிச் சபையினரும்

அரசகேசரிப் பிள்ளையார் தேர்த்திருவிழா

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா இன்று காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. தேர்த்திருவிழா விசேட வர்ணனை மற்றும் சொற்பொழிவு ஆகியவற்றை அதிபர் ச.லலீசன் நிகழ்த்துவார். மறுநாள் புதன்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவம் நடைபெறும். (04ஆம் பக்கத்தில் சிறப்பு மலர்)

இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

அமரர்
குமாரவேலு சுப்பிரமணியம்
(நாயகிஸ் புரடெக்ஸ் உரிமையாளர்)

தோற்றம்	மறைவு
18.01.1944	17.09.2005

அன்புடனும் பண்புடனும் பாசத்துடனும் வாழ்ந்து
எமது இல்லத்தின் பொறுப்பாய் இருந்தீரே
இன்முகங் காட்டி எல்லோருடனும் நேசமாய்ப் பழகி
உற்ற நேரத்தில் உதவிகள் பல செய்து
என்றும் நல்லவராய் இன்சொல் பேசி மகிழ்ந்தீரே
எம்மைவிட்டு என்தான் பிரிந்தீரோ
ஈராண்டென்ன? ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும்
ஆறாது எம் துயரம்.

ஆத்மா சாந்தியடைய ஆண்டவனின் திருப்பாதங்களைப் பிரார்த்திக்கின்றோம்.

வட்.தி.கிழக்கு,
வட்டுக்கோட்டை. (66145)

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

அறிவித்தல்

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானம்
மகோற்சவ விவரம்
தேர்த்திருவிழா 25.09.2007

உச்சக்காலம்	6.30 மணி காலை
ஜம்காலம்	6.40 மணி
அபிஷேக ஆரம்பம்	7மணி
விசேட பூசை	7.30 மணி
தம்பபூசை	7.50 மணி
வசந்தமண்டப பூசை	8.15 மணி
ஆரோகணம்	9.15 மணி
பச்சைசாத்துதல்	12.00 மணி

கடல் தீர்த்தத்திருவிழா 26.09.2007

வசந்த மண்டபப்பூசை	பி.ப 1.30 மணி
தீர்த்தத்திருவிழா	பி.ப 2.00 மணி

மு.கு:- குறிப்பிடப்பட்ட பக்தர்கள் மட்டும் தீர்த்தக்கடற்கரைக்குச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானம், அறங்காவல் சபை, புலோலி.

(சி/53792)

தவறிவிட்டது

பெருமாள் கோவில் தீர்த்த உற்சவத்தின் போது கறுப்பு நிற நோக்கியா (NOKIA) வகை கையடக்க தொலைபேசி காணாமல் போய்விட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ்ப்பாணம், செலான் வங்கி முகாமையாளர் அரவிந்தனிடம் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொ.பே இல 0773166799,0212225073,0212223047

பயண ஏற்பாடுகள்

மலேசியாவில் Study, Work Permit, Visit Visa சகல நாடுகளுக்கும் Visa ஆலோசனைகள், நியாயமான கட்டணத்தில் Air Ticket, Embassy, Passport Form பூர்த்தி செய்ய இந்திய சுற்றுலா ஒழுங்குகள், ஆலோசனைக் கட்டணம் 500/= மட்டுமே. A.Ravikumar 0773554552

உங்களுக்கும் ஒரு சந்தர்ப்பம்

கடந்த 23.09.2007 ஆம் திகதியன்று உதயன் பத்திரிகையில் மேற்படி தலைப்புடன் 4ஆம் பக்கத்தில் வெளியாகி இருந்த LIC ஆயுள் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் விளம்பரத்தில் இம்மாதம் 27ஆம், 28ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள நேர் முகப்பரீட்சைகள் 105, கண்டி வீதி, சாவகச்சேரி என்ற விலாசத்திலும் இடம்பெறும் என்ற விவரம் தவறுதலாக விடுபட்டுவிட்டது. அதனையும் சேர்த்து வாசிக்கவும்.

LIC
Life Insurance Corporation (Lanka) Ltd.

ஆயுள் காப்புறுதி கூட்டுத்தாபனம் (இலங்கை) வரை.

நன்றி நவிலல்

அருட்தந்தை Rev. Fr. பொனிபஸ்

கரம்பொன்னைப் பிறப்பிடமாகக் கொண்டு கண்டி மறைமாவட்டத்திலும்; யாழ்.மறைமாவட்டத்தில் பருத்தித்துறை, சில்லாலை, ஆனைக்கோட்டை, நவாலி, கிளிநொச்சி, குருநகர், இளவாலை, மிருசுவில் ஆகிய இடங்களிலும் பங்குத் தந்தையாக பணிபுரிந்த அருட்தந்தை Rev.Fr பொனிபஸ் அவரகள் கடந்த 27.08.2007 அன்று இறைபாதம் அடைந்தார்.

இவரது மறைவுச்செய்தி கேட்டு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொண்ட உள்ளூர், வெளியூர் உறவினர், நண்பர்களுக்கும் 31.08.2007 A.F றேமன்ட் மலர்ச் சாலையில் அன்னாரது பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் 01.09.2007 அன்று இறுதி அஞ்சலித் திருப்பலியில் பங்குபற்றிய யாழ்ப்பாணம், மன்னார், கண்டி மறைமாவட்டங்களைச் சேர்ந்த அருட் தந்தையர்கள், அருட்சகோதரிகள், உறவினர், நண்பர்கள், பங்கு மக்களுக்கும், திருப்பலியை ஒப்புக்கொடுத்த மன்னார் மறை மாவட்ட ஆயர் மேதகு இராயப்பு யோசப் ஆண்டகை, கண்டி மறை மாவட்ட ஆயர் மேதகு லியானி பொனான்டோ ஆண்டகை அவர்களுக்கும் தனது அனுதாபத்தை எம்முடன் நேரில் பகிர்ந்து கொண்ட யாழ்.மறை மாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களுக்கும் பதுளை மறை மாவட்ட ஆயர் வின்சன்ற் பொனான்டோ ஆண்டகை அவர்களுக்கும், சுகவீனமுற்ற நாளில் இருந்து இறப்பு முதல் இறுதிச் சடங்குவரை அயராது உழைத்த யாழ்.மறை மாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார், குரு நண்பர்கள் மற்றும் கொழும்பு பேராயர் இல்லத்தை சேர்ந்த அருட்தந்தை சுனில் டி சில்வா அடிகளார்க்கும் மலர்வளையம் செலுத்திய அன்பு நெஞ்சங்களுக்கும் கொழும்பு கிறகறீஸ் வீதியில் அமைந்துள்ள குருமார் விடுதி பொறுப்பாளர்அருட்சகோதரிக்கும் மற்றும் பணியாளர்களுக்கும் 01.09.2007 அன்று யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் அன்னாரின் இறுதி அஞ்சலி நினைவாக திருப்பலி ஒப்புக் கொடுத்த குருக்கள் மற்றும் அருட்தந்தையர், அருட்சகோதர சகோதரிகள், யாழ். மறை மாவட்ட பங்கு மக்கள், பத்திரிகையில் கண்ணீர் அஞ்சலி தெரிவித்த யாழ்.மறை மாவட்ட பங்கு மக்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இவரின் ஆன்மா இளைப்பாற்றிற்காக நாளை (26.09.2007) புதன்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இதில் அனைவரையும் கலந்து செபிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
தாயி, சகோதரர், குடும்பத்தினர்
(66093)

இதய அஞ்சலி

எமது சக ஆசிரியர் திருமதி திருலோகநாயகி யோகேந்திரன் அவர்களின் அன்புத் தந்தை

முருகேசு சின்னையா

அவர்களின் மரணச்செய்தி கேட்டு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரிய நலன்புரிச் சங்கம்,
யா/அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை,
பருத்தித்துறை. (சி/53793)

குறுந்திரைப்படங்களின் காட்சிகள் 2007

I 'கால்'
(அசாதாரண சூழ்நிலையில் சாதாரண மனிதர்களின் கதை)

II 'வெட்டை'
(சாதாரண சூழ்நிலையில் அசாதாரண மனிதனின் கதை)

காலம் - 26.09.2007 புதன்கிழமை மு.ப 10.00 மணி
01.10.2007 திங்கட்கிழமை பி.ப 1.30 மணி

இடம் - கைலாசபதி கலையரங்கு, யாழ். பல்கலைக்கழகம்.

வெறு வெளி அரங்கக் குழு
நுண்கலைத்துறை, யாழ். பல்கலைக்கழகம்.

பிரவேசம் - 50/= 100/=

விளம்பர அனுசரணை - ஜி.எஸ் லிங்கநாதன் கோ
இல 13,14, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம் (66147)

மரண அறிவித்தல்கள்

திருமதி அன்ரனிடா எக்பேட்(டனா)

18,கண்டி வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி அன்ரனிடா எக்பேட் (டனா) 22.09.2007 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற கென்சன்டைன் ஜோன்பிள்ளை - றெபேக்கா ஜோன்பிள்ளையின் அன்பு மகளும் காலஞ்சென்ற யோக்கிம்பிள்ளை கிருசாந்துஸ் - அந்தோனியாகிருசாந்துஸ் தம்பதியரின் மருமகளும் கிருசாந்துஸ் எக்பேட்டின் (இளைப்பாறிய தபால் அதிபர் - கனடா) அன்பு மனைவியும் சந்துரு (கனடா), சேகு(கனடா), டகு(கனடா), பந்து(கனடா)ஆகியோரின் அருமைத் தாயும் சேக்ஸ்பியர்(Air Ceylon முன்னாள் உத்தியோகத்தர் - லண்டன்), காலஞ் சென்ற சிம்சன், திருமதி கொன்சி செபஸ்சியாம்பிள்ளை(கனடா), தீசன் ஜோன் பிள்ளை ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கஆராதனைகள் 29.09.2007 சனிக்கிழமைமுற்பகல் 10 மணியளவில் கனடாவில்நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். தகவல்:

இ.திலகரட்ணம்
(உடன் பிறவா சகோதரன்).

77, Huntly Street, Toranto, Ontario,
M4Y 2B3, Canada.
T.P 001416, 9646555

2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 1936 - 11 - 05

இறப்பு 2005 - 10 - 07

அமரர் சின்னத்தம்பி கதிரவேலு

திதி: 25.09.2007

அன்பாக எம்மோடு கூடி வாழ்ந்து
எம்மை விட்டு எங்கு சென்றாயோ?
உங்களை நாம் இனி எங்கு காண்போம்.

உதயசூரியன் ச.ச.நி,
ஆதியாமலை,
உடுப்பிட்டி. (66123)

அருந்தவராசா(மகன்),
அ.ஜெயா(மருமகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடாநாட்டு மாணவர்களுக்கான 14 லட்சம் புத்தகங்கள் கப்பலில் எடுத்துவரப்படும்

யாழ்ப்பாணம்,செப்.25

குடாநாட்டு மாணவர்களின் இலவச புத்தக விநியோகத்திற்கென 14 லட்சம் புத்தகங்களை கப்பல் மூலம் அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளை கல்வித் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

தென்பகுதியில் அடுத்தாண்டுக்கான புத்தகங்களின் விநியோகத்தின் முதல் கட்டம் முடிவடைந்துள்ளது. தமிழ், சிங்கள, ஆங்கில மொழிகளில் 2 கோடியே 70 லட்சம் புத்தகங்கள் 336 வகைகளில் அச்சிடப்பட்டுள்ளன.

டிசெம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் புத்தகங்களின் விநியோகம் முடிவடைய வேண்டும் என கல்வித் திணைக்களத்தின் வெளியீட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

யாழ்.பாடசாலை மாணவர்களுக்கான புத்தகங்களை ''இந்துருவலி'' மற்றும் ''றுகுணு'' கப்பல்கள் மூலம் யாழ்.குடாநாட்டிற்கு எடுத்துவருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (1-68)

வினாத்தாள் தயாரிப்பு குறித்த கூட்டம்

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கான ஆண்டிறுதிப் பரீட்சை வினாத்தாள் தயாரிக்கும் பணி தொடர்பான கூட்டம் நாளை புதன்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தரம் 1 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புகளில் கற்பிக்கும் சகல பாடங்களின் ஆசிரியர்களையும் இப்பணியில் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேத்நாயகம் கேட்டுள்ளார். (202-207)

வல்லிபுர ஆலய சமுத்திரத் தீர்த்தத்திற்குச் செல்வதற்கு 50 பேருக்கு மட்டுமே அனுமதி

உடுப்பிட்டி,செப்.25

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் சமுத்திரத் தீர்த்த உற்சவத்திற்குச் செல்வதற்கு 50 பேருக்கு மட்டுமே படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

தற்போது நடைபெற்றுவரும் வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் பெருந்திருவிழாவில் சமுத்திரத் தீர்த்த விழா நாளை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது. வருடாந்தம் நடைபெறும் இந்த உற்சவத்திற்குப் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் ஆலயத்திலிருந்து ஆஞ்சநேயரை சமுத்திரத்திற்கு எடுத்துச்செல்வது வழமை.

ஆயினும் இம்முறை பாதுகாப்புக் காரணங்களுக்காக உற்சவகாரர், அர்ச்சகர், தொண்டர்களென மட்டுப்படுத்துப்பட்டு 50 பேருக்கு மட்டுமே சமுத்திரத்திற்குச் செல்வதற்கு அனுமதி வழங்கப்படும் எனப் படையினர் அறிவித்துள்ளனர்.

இவர்கள் அடையாள அட்டைகளைச் சமர்ப்பித்துப் படையினரின் அனுமதி பெற்ற பின்னரே செல்ல அனுமதிக்கப்படுவர்.

பிற்பகல் 2 மணிக்கு சமுத்திரத் தீர்த்தம் ஆரம்பமாகி பிற்பகல் 3 மணிக்கு ஆலயத்தில் வைத்து அடியார்களுக்கு தீர்த்தம் வழங்கப்படும் என ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (202-155)

வல்லிபுர ஆலய உற்சவத்தையொட்டி மயிலை விநியோகம் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,செப்.25

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய பெருந்திருவிழாவின் விசேட உற்சவங்களை முன்னிட்டு நேற்று திங்கட்கிழமை தொடக்கம் 4 தினங்களுக்கு மணல் விநியோகம் இடைநிறுத்தப்பட்டுள்ளது என யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் அறிவித்துள்ளார்.

மேற்படி ஆலயத்தின் சப்பரம், தேர், சமுத்திரத் தீர்த்தம், கேணித் தீர்த்தம் ஆகிய விசேட உற்சவ காலங்களில் போக்குவரத்து நெருக்கடியைத் தவிர்க்கும் நோக்குடன் நேற்றுத தொடக்கம் நாளை மறுதினம் வியாழக்கிழமை வரை மணல் விநியோகம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அரச அதிபர் அறிவித்துள்ளார். (202)

சேதமடைந்த வீதிகளை அதிகாரிகள் நேரில் பார்வையிட்டனர்

நவாலி,செப்.25

தற்போது பெய்து வரும் பெரும் மழையினால் சேதமடைந்துள்ள நவாலி சின்னப்பா வீதி, சங்கையாஞ் வீதி, வைரவர் வீதி என்பவற்றை அதிகாரிகள் குழுவொன்று நேரில் சென்று பார்வையிட்டுள்ளது. இந்த வீதிகள் சேதம் குறித்து உதயன் கூட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (202-100)

கலாபூஷணம் க.ப.சிவராசாவின் மாணவன் பாலசிங்கம் விக்னேஸ்வரனின் மிருதங்க இசை அரங்கேற்றம் அண்மையில் நடை பெற்றது. அந்நிகழ்வின்போது எடுக்கப்பட்ட படம்.

நூற்றுக்கணக்கான சிறுவர்கள் நகரில் கூடி சமாதானத்திற்காகக் குரல் எழுப்பினர்

யாழ்ப்பாணம், செப்.25

உலக சமாதன தினத்தை ஒட்டி குடாநாட்டில் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான சிறுவர் நகரில் கூடி சமாதனத்துக்காகக் குரல் கொடுத்தனர்.

யாழ்.நட்புறவுச்சிறுவர்கள் இணையத்தின் ஊடாக யாழ்.மாவட்டத்தில் உள்ள சிறுவர்கள் தொடர்பான பணிகளை மேற்கொள்ளும் 18இற்கும் அதிகமான அரச சார்பற்ற நிறுவனங்களின் ஏற்பாட்டில், ''நாம் விரும்பும் சமாதானம்'' என்னும் தொனிப்பொருளிலான இந்தச் சமாதான நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

பெருந்திரளான சிறுவர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு பெரிய அளவில் வரையப்பட்டிருந்த இலங்கைப்படத்தில் இலங்கையின் தேசியக் கொடியில் காணப்படும் பச்சை, மஞ்சள், கடும் சிவப்பு நிறங்களினால் தமது கையடையாளங்களைப் பதித்தனர். தமிழர் சிங்களவர் முஸ்லிம் ஆகிய மூன்று இனங்களையும் குறிக்கும் வகையில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் சிறுவர்கள் ஒருங்கிணைந்து சமாதானம் வேண்டி பலூன்களைப் பறக்கவிட்டதுடன் மைதானத்தைச் சுற்றிச் சங்கிலித் தொடராக கைகளைக் கோர்த்து நின்றபடி சமாதானத்திற்காகக் குரல் கொடுத்தனர்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவஞானசுந்தரம் கலந்துகொண்டு சிறுவர்களின் கையடையாளங்கள் இடப்பட்ட இலங்கைப்படத்தையும் சமாதானம் என ஆங்கிலத்தில் பொறிக்கப்பட்ட PEACE எழுத்து வடிவில் அமர்ந்தபடி பலூன்கள் பறக்கவிடுவதையும் பார்வையிட்டதுடன் சமாதானத்தின் தேவை குறித்தும் உரையாற்றினார்.

யாழ். மாவட்ட யுனிசெவ் நிறுவன பொறுப்பாளர் யூடித் புறூனோவும் நிகழ்வில் கலந்துகொண்டார்.

(1-202-111-68)

குறுக்கே வந்த மாட்டுடன் மோ.சைக்கிள் மோதி ஒட்டுநர் படுகாயம்

நாவற்குழி,செப்.25

வீதியில் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் வீதியின் குறுக்கே திடீரென வந்த மாடு மீது மோதியதில் மோட்டார் சைக்கிள் ஓட்டி தலையில் படுகாயம் அடைந்தார். இச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை மாலை நாவற்குழியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் இலங்கை போக்குவரத்துச் சபை சாரதியான கைதடி குமாரநகரைச் சேர்ந்த நாகராசா பிரதீப் (வயது 24) என்பவரே படுகாயம் அடைந்தவராவார். இவர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (202-288)

கமநல குழுக்களுக்குப் பதிலாக அபிவிருத்திச் சபைகள் அமைக்கப்படும்

யாழ்ப்பாணம்,செப்.25

யாழ்.மாவட்டத்திலுள்ள கமநல சேவை நிலையங்களில் இதுவரை காலமும் இயங்கி வந்த கமநல குழுக்களுக்குப் பதிலாகக் கமநல அபிவிருத்திச் சபைகளை அமைப்பதற்கு கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் ம.பற்றிக்டிறஞ்சன நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

2000ஆம் ஆண்டு 46ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டத்திற்கு அமைவாக இந்தச் சபைகள் விரைவில் அமைக்கப்படவுள்ளன.

இந்தச் சபைகளில் குறிப்பிட்ட பிரதேசத்தில் உள்ள பதிவு செய்யப்பட்ட கமக்கார அமைப்புக்களில் இருந்து அந்த அமைப்புக்களின் சிபாரிசுடன் கமநல ஆணையாளர் நியமிக்கும் பிரதிநிதிகளும், கமநல அபிவிருத்தியுடன் தொடர்புடைய நிறுவனங்களில் இருந்து ஆணையாளரால் நியமிக்கப்படும் பிரதிநிதிகளும் இதில் இடம்பெறுவார்கள். (50)

தூலிக்கொடி அறுத்த வழக்கில் சந்தேக நபர் அடையாளம் காணப்பட்டார்

யாழ்ப்பாணம்,செப்.25

கரணவாயில் கடந்த ஜூன் மாதம் 16ஆம் திகதி இடம்பெற்ற தாலிக்கொடி திருட்டுத் தொடர்பாக பிரதித்துறை நீதிமன்றத்தில் கடந்த வெள்ளியன்று நடந்த அடையாள அணிவகுப்பில் ஒருவர் இனங்காணப்பட்டார்.

கரணவாயைச் சேர்ந்த திருமதி புவனேஸ்வரி என்பவரின் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த திருடன் அவரது 90ஆயிரம் ரூபா பெறுமதியான முறுக்குத் தாலிக்கொடியை அறுத்துக் கொண்டு தப்பிவிட்டார்.

நெல்லியடிப் பொலீஸார் மேற்கொண்ட விசாரணையில் சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்ட நபர் அடையாள அணிவகுப்பில் நேற்று நிறுத்தப்பட்டார்.

சாட்சிகள் அவரை அடையாளம் காட்டியதை அடுத்து அடுத்த மாதம் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் க.அரியநாயகம் உத்தரவிட்டார். (1)

பதவி வெற்றிடங்கள்: விண்ணப்பிக்கலாம்

வலி.வடக்கு,செப்.25

இலங்கை பொலிஸ் திணைக்களத்தினால் பொலிஸ் கொன்ஸ்டபிள், சாரதி பயிலுநர் பதவிகளுகான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

19-28 வயதுக்கு உட்பட்டவராகவும் ஜி.சீ.ஈ. சாதாரண பரீட்சையில் கணிதம் மற்றும் ஆட்சேர்ப்பு செய்வதற்கான மொழி உட்பட ஆறு பாடங்களில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தி பெற்றிருக்கவேண்டும்.

அத்துடன் 5 அடி 3 அங்குலம் உயரம் உடையவராகவும் மார்புச் சுற்று 30 அங்குலம் உடையதாகவும் இருத்தல்வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி 21.12.2007 ஆம் திகதியாகும்.

மேலதிக விவரங்களை 21.09.2007 ஆம் திகதிய அரச வர்த்தமானியில் பார்வையிடமுடியும். (202-86)

* * *

வலி.வடக்கு,செப்.25

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் பெண் பொலிஸ் கொன்ஸ்டபிள் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி 18-25 வயதுக்கு இடைப்பட்டவராக இருப்பதுடன், ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் கணிதம், ஊடக மொழி அடங்கலாக ஒரே தடவையில் ஆறு பாடங்களில் சித்தி அடைந்திருத்தல்வேண்டும்.

5 அடி 2 அங்குலம் உயரம் உடையவராகவும் இருத்தல்வேண்டும். விளையாட்டுத்துறையில் ஆர்வம் காட்டியவர்களுக்கு பொலிஸமா அதிபரின் தற்துணிவின் பெயரில் விலக்களிக்கப்படலாம்.

விண்ணப்பமுடிவு திகதி 21.12.2007 ஆகும்.

மேலதிக விவரங்களை 21.09.2007ஆம் திகதிய அரச வர்த்தமானியில் பார்வையிடலாம். (202-86)

கால போக நெற்செய்கைக்கு தேவையான மானிய உரம் வழங்கும் நடவடிக்கை ஆரம்பம்

கமநல சேவை நிலையங்களில் பயனாளிகளின் விவரங்கள்

யாழ்ப்பாணம், செப்.25

குடாநாட்டில் காலபோக நெற்செய்கைக்குத் தேவையான மானிய உரம் வழங்கும் நடவடிக்கை நேற்றுத் திங்கட்கிழமை ஆரம்பமானது.

இதுதொடர்பான ஆரம்ப நிகழ்வொன்று நேற்றுக காலை புத்தூர் கமநல சேவைகள் நிலையத்தில் இடம்பெற்றது. யாழ்.மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் ம.பற்றிக்டிறஞ்சன் இதில் கலந்து கொண்டு மானிய உரம் வழங்கும் நடவடிக்கையை ஆரம்பித்து வைத்தார்.

காலபோகத்துக்கு தேவையான மானிய உரம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்டுள்ளதாக கமநல சேவைகள் திணைக்கள வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.

இந்த மானிய உரம் ஒரு ஏக்கருக்கு யூரியா 90 கிலோ, ரி.எஸ்.பி - 25கிலோ, எம்.ஒ.பி 25கிலோ என்ற அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளது.

ஒரு கிலோ உரத்தின் மானிய விலை 350 ரூபாவாகும். அத்துடன் போக்குவரத்து மீளளிப்புப் பணமாக ஒவ்வொரு பயனாளியும் தலா 100 ரூபா செலுத்தவேண்டும்.

ஒவ்வொரு கமநல சேவைகள் திணைக்களத்துக்கு மீளக் கிடைக்கும் பட்சத்தில் பயனாளிகளிடம் இருந்து பெறப்பட்ட 100 ரூபா பணம் மீளளிக்கப்படும்.

மானிய உரம் பெறுவதற்குத் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் விவரப்பட்டியல் கமநல சேவை நிலையங்களிலும், கமக்கார அமைப்புப் பிரதேசங்களிலும், பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்ற ஒழுங்கிலேயே மானிய உரம் வழங்கப்படும் எனவும் இது தொடர்பாக ஏதாவது முறைப்பாடுகள் இருப்பின் அப்பகுதிப் பெரும்பாக உத்தியோகத்தருக்குத் தெரிவிக்குமாறும் கமநல சேவைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

(5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்வேலி அருள் மிகு அரசகேசரிப் பிள்ளையார் ஆலய தேர்த் திருவிழாச் சிறப்பிதழ்

25.09.2007 செவ்வாய்க்கிழமை

தும்பிக்கையான் துணை

சைவசமயத்தில் முதற் பூசைக்குரியவராகப் போற்றப்படுபவர் விநாயகர் ஆகும். எக்கருமங்களைத் தொடங்கினாலும் முதல் பிள்ளையாருக்கு வழிபாடு செய்தே தொடங்குவது சைவசமய மரபாகும். அதனால் கருமங்கள் தடையின்றி நிறைவேறுவதை அனுபவவாயிலாக அறியலாம். இன்று எமது ஆலயத்தில் தேர்த் திருவிழா சிறப்பாக நடைபெறுகின்றது. தேரில் பவனிவரும் விநாயகர் எல்லோருக்கும் நல்லருள் புரிகின்றார். பஞ்சகிருத்தியங்களில் அழித்தற் தொழிலையே தேர்த்திருவிழா குறிக்கின்றது. அவ்வகையில் ஆன்மாக்களின் ஆணவமலத்தைப் போக்கி நல்லருள் தரும் சிறப்புத்திருவிழாவே தேர் உற்சவமாகும்.

நல்லூரை ஆட்சி செய்த புலவனும் பிரதானியுமாகிய அரசகேசரி என்ற பெரியோனால் ஸ்தாபிக்கப்பட்டதே அரசகேசரிப் பிள்ளையார் ஆலயம். சரித்திர முக்கியத்துவம் உடைய எமது ஆலயத்தில் ஆவணி சதுர்த்தியை முன்னிட்டு வரும் பௌர்ணமியை தீர்த்த நாளாக கொண்டு பதினொருநாள்கள் மகோற்சவம் நடைபெறுகின்றது. இவ்வாறு பழைமையும் அருளும் நிறைந்த இவ்வாலயத்தில் இன்று நடைபெறும் தேர்த்திருவிழா முக்கியத்துவம் உடையதாகும்.

எமது ஆலயத்தில் உள்ள இரதம் சிற்பச் சிறப்பு உடையது. இந்தியாவில் இருந்து வந்த சிற்ப நிபுணர்களால் உருவாக்கப்பட்டது. விநாயகருடன் தொடர்புடைய புராணக்கதைகள், அறுபத்து மூன்று நாயன்மாரின் உருவச்சிலைகள் இத்தேரில் அழகாக அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு சிறப்புப் பொருந்திய தேரில் இராஜ உபசாரத்துடன் வரும் விநாயகப்பெருமான் எல்லோருக்கும் நல்லருள் தருவான். அடியார்களின் இடர் நீக்கி இன்பம் நல்குவான். அவன் பாதம் பணிந்து திருவருள் பெறுவோமாக.

சிவஸ்ரீ.சா.சோமதேவக்குருக்கள்
ஆலய பிரதமகுரு (மஹோற்சவகுரு), அரசகேசரிப் பிள்ளையார் கோயில், நீர்வேலி.

அரசகேசரி திருக்கூட்டம் வாழி! வாழி!

மின்பொலியும் மாமுகிலும் மறையும் வாழி
மிளிர் வேதாகமங்கள் மிகவோங்கி வாழி
கொன் பொலியும் அக்கமும் வெண்ணீறும் வாழி
கூறு மறையோதும் மறையவரும் வாழி
மன் பொலி செங்கோலரசர் நீடு வாழி
மகப் பொலிவு மகோற்சவம் எங்கெங்கும் வாழி
பொன்பொலியு நீர்வை எனும் பதியை நாளும்
போற்று திருக்கூட்டம் என்றும் வாழி! வாழி!

- சிற்சபேசன்.

விநாயகப் பெருமானின் தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்:

ஷாம்பவி பதிப்பகம் (நீர்வேலி)
276, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பவானி களஞ்சியம்
இராஜ வீதி, நீர்வேலி.

சாரங்கா நகைமாடம்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 2222480 Fax: 021 2226972

திருமுருகன் திருமண மண்டபமும் பல்பொருள் அங்காடியும் வீடியோ, போட்டோ
கந்தசாமி கோயிலடி, நீர்வேலி.

அடியார்களுக்கு அருள்புரிய அழகுரத பவனிவரும் அரசகேசரி விநாயகப் பெருமான்

''உலகம் யாவையும் நிற்பனவத் தொழில்
விலகலாது விளைத்தும் விளைத்திலா
திலகு நீர்மையது எப்பொருள் அப்பொருள்
அலகிலாத அருட்கடல் மூழ்குவாம்''
(இரகுவம்சம் -அரசகேசரி)

இரகுவம்ச மகாகாவியத்தை தமிழில் யாத்த அரசகேசரிக் கவியரசனால் ஸ்தாபிக்கப் பெற்றதும் விநாயகப் பெருமான், சிவன் ,அம்பாள், முருகன் முதலாய மூர்த்திகள் புடைசூழ எழுந்தருளியுள்ளதும் ஈழத்தின் புராதன ஆலயங்களுள் ஒன்றாகக் கருதப்படுவதும் சுயம்புவான கூப தீர்த்தத்தை உடையதும் சங்கர பண்டிதர் முதலிய பெரியோர்கள் பலர் வாழ்ந்த 'பவித்திரமான பூமி 'ஆகிய நீர்வையூரின் மத்தியில் விளங்குவதும் அறநெறி செயற்பாடுகளை வளர்க்கும் வண்ணம் மிளிர்வதுமாகிய நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் ஆலயத்தில் இன்று விநாயகர் ஈழத்தின் தனித்துவ சிறப்புமிக்க ரதங்களுள் ஒன்றாக உள்ள இரதத்தில் ஆரோகணித்து உலக க்ஷேமத்தின் பொருட்டு அருள் புரிகின்றார்.

நமது தேசத்தில் சாந்தியும் சமாதானமும் மலரவும் தர்மம் செழிப்புறவும் விநாயகப் பெருமான் பேரருள் புரிய வேண்டி அவர் பாதக் கமலங்களைச் சேவித்து இன்றைய தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துவதில் பெருமகிழ்வுறுகிறோம்.

கஜவக்த்ரம் சுரசிரேஷ்டம் கர்ண சாமர பூஷிதம்/
பாசாங்குச தரம் தேவம் வந்தேஹம் கணநாயகம்//

சிவஸ்ரீ கு.தியாகராஜக் குருக்கள்.

அல்லல் அகலப் பிரார்த்திப்போம்

பரராஜசேகர மாமன்னனின் மருமகனும் தமிழில் இரகுவம்ச மகாகாவியத்தை எழுதியவனும் யாழ்ப்பாண அரசின் மகாமந்திரியும் ஆகிய அரசகேசரிக் கவிராஜனால் ஸ்தாபிக்கப்பட்ட அதி அற்புதமான நீர்வேலி அரசகேசரி விநாயகர் ஆலயத்தில் இன்று இரதோற்சவம் வெகுசிறப்பாக நிகழ்கின்றது.

விநாயகப் பெருமான் மிக எளிமையான போருட் சக்தி மிக்க பெருந்தெய்வம். ''கருணைக்கடல்'' என்று சேவிக்கப்படும் கடவுள். இன்று அரசகேசரி விநாயகப் பெருமான், முருகன், சண்டிகேஸ்வரர் சகிதமாகத் தேரேறி வீதி வலம் வருகிறார். வானளாவ உயர்ந்த இராஜ கோபுரத்துடன் காட்சி தரும் அரசகேசரிப்பேராலயத்தில் ஆவணி மாத விநாயக சதுர்த்தியை ஒட்டியதாக கொடியேறி பூரணை முழு நிலவு நாளில் தீர்த்தோற்சவம் நிகழத் தக்கதாக பதினொரு நாள்கள் மஹோற்சவம் நடைபெறுகிறது. இன்று பத்தாவது நாளில் இரதோற்சவப் பெருவிழா நிகழ்கிறது.

இன்று தேரேறி வீதி வலம் வரும் அரச கேசரி விநாயகரிடம் எமது அல்லல்கள் அகல அருள் புரிய வேண்டிப் பிரார்த்திப்போமாக!

''வேழ முகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும் ''.

பரிபாலன சபை
அரசகேசரிப் பிள்ளையார் தேவஸ்தானம், நீர்வேலி.

நெஞ்சகலா 3 ஆவது ஆண்டு நினைவலைகள்

பிறப்பு 18 . 04 . 1944 — இறப்பு 27 . 09 . 2004

தம்பிப்பிள்ளை சுந்தரலிங்கம்

திதி: பூர்வபக்க சதுர்த்தசி

பாரத்தின் திருவுருவே!
உங்கள் முச்சு நின்று முன்றாண்டு
முடிந்து போனதையா...
உங்களை இழந்து உதவியின்றி
தடுமாறி நிற்கின்றோம் ஐயா!
நிம்மதியான நித்திரையே
உங்களுக்கு நிரந்தரமாகுமென்று
நாம் நினைத்தேனும் பார்த்ததில்லை!
நெஞ்சம் கனத்த சுமைகளைத் தாங்கி
நிரந்தரமான உங்கள் நினைவலைகளுடன்...

150, நெடுங்குளம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். (66065)

மனைவி, மக்கள்.

அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 07 . 03 . 1928 — மறைவு 26 . 08 . 2007

அமரர் செல்லையா பொன்னு

(பலாலி கிழக்கு)

26.08.2007 ஞாயிற்றுக்கிழமையன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவியின் இறுதிக்கிரியைகளில் நேரடியாகக் கலந்து கொண்டு துயர்பகிர்ந்தோருக்கும் மற்றும் தபால், தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்தோருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்று (25.09.2007) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
கன்னாகம். (66098)

தகவல்:
குடும்பத்தினர்.

பாடசாலை மாணவர்களுக்கு சுவரொட்டிப் போட்டி

நல்லூர், செப்.25

தேசிய உயிரூட்டல் நிகழ்வுத் திட்டத்தின் கீழ் கியூடெக்- ஹரித்தாஸ் நிறுவனம் மாணவர்களுக்கிடையிலான சுவரொட்டிப் போட்டி ஒன்றை நடத்தியுள்ளது.

அனர்த்த முகாமைத்துவம் (துயர் எதிர் கொள்ளல்) என்ற பொருளில் கடந்த ஞாயிற்றுக் கிழமை யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்ற இந்த ஓவியப் போட்டியில் 20 இற்கும் அதிகமான மாணவர்கள் கலந்து கொண்டனர். (202-111)

சிறுவர் அரங்கப் போட்டியில் இரு பாடசாலைகள் தெரிவு

நவாலி, செப்.25

ஆனைக்கோட்டை குடும்பப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற சிறுவர் அரங்கப் போட்டியில் நவாலி சென்.பீற்றேஸ் பாடசாலையும் ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலையும் கோட்ட மட்டத்திற்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இப் போட்டிகள் கடந்த வாரம் உயரப்புலம் குணபாலன் வித்தியாசாலையில் இடம்பெற்றன. (202- 100)

புரட்டாதிச்சனி வழிபாட்டிற்கு ஏற்பாடு

சுழிபுரம், செப்.25

புரட்டாதிச் சனி சுட்டி எரிப்பு வழிபாடுகள் ஒவ்வோர் சனியும் நடைபெற பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய நிர்வாகத்தினர் ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

சுட்டி எரிப்பவர் வசதிக்கு தக்கவாறு சகல பொருள்களும் ஆலயத்தில் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவித்துள்ளனர். (28)

பருத்தித்துறை வைத்தியசாலையில் கவிஸ் அரசின் உதவியுடன் புனரமைப்புப் பணிகள் ஆரம்பம்

உடுப்பிட்டி, செப்.25

சுவற்சர்லாந்து அரசின் உதவியுடன் பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலையில் சில அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் நீர்வடிகால் அமைப்பு, மலசல குழாய் அமைப்பு போன்றவற்றின் திருத்த வேலைகளையும் புதிய வேலைகளையும் ஆரம்பித்துள்ளனர். (202-155)

31 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் சிறாப்பராகக் கடமை புரிந்து எங்கள் எல்லோரின் மனதிலும் நீங்கா நினைவு கொண்ட

அமரர்

க.சு.ஐயாத்துரை

அவர்கள் அமரத்துவமடைந்த 31 ஆம் நாளாகிய இன்று (25.09.2007) செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் நிகழ்வில் அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் திருவருளை வேண்டி நிற்போமாக.

நலன் புரிச்சங்கம்,
பிரதேச செயலகம், வலி.கிழக்கு. (66110)

31 ஆம் நாள் நினைவஞ்சலி அழைப்பு

மலர்வு 14 . 04 . 1941 — உதிர்வு 26 . 08 . 2007

26.08.2007 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

அமரர் கார்த்தி சின்னராசா

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியை இன்று (25.09.2007) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால், தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஐங்கரன் வீதி,
சுதுமலை தெற்கு, மானிப்பாய். (64990)

குடும்பத்தினர்
(மருமகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவீரர் தின உரைக்கு முன்னர் இராணுவ வெற்றிக்கு புலிகள் திட்டம்

'லக்பிம' வார ஏடு அலசல்

கொழும்பு, செப்.25

தமது மாவீரர் நாள் உரைக்கு முன்னதாக விடுதலைப் புலிகள் ஒரு இராணுவ வெற்றியை ஈட்ட முனையலாம். வடக்கை விடத் தெற்கிலும் அவர்கள் தாக்குதலை நடத்தலாம் என்று சிங்கள ஊடகமான லக்பிம வார ஏடு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் லக்பிமவின் பாதுகாப்பு ஆய்வுப் பத்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எரித்திரியாவில் இருந்து விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கொள்வனவு செய்கின்றனர் என புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. வறுமையில் வாடும் இந்த நாட்டில் விமான எதிர்ப்பு ஏவுகணைகளையும் நவீன ஆயுதங்களையும் குறைந்த விலையில் பெற முடியும். எனவே, விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களைப் பெறுவதற்கான இலகுவான இடம் எரித்தியாவாக விளங்குகின்றது.

இதேவேளை, விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் தொடர்பான புலனாய்வுத் தகவல்கள் கிடைத்துள்ளன. அவர்கள் 1,200-2,000 கடற்புலி உறுப்பினர்களைக் கொண்டுள்ளனர். அவர்களின் படகு தொகுதியில் 15 தொடக்கம் 20 படகுகள் மணிக்கு 35 கடல்மைல் வேகத்தில் பயணிக்கக்கூடியவை. இவற்றில் 23 மி.மீ., 12.7 மி.மீ., 30 மி.மீ. பீரங்கிகள் பொருத்தப்பட்டிருக்கின்றன. கடற்புலிகளின் இந்தப் படகுத் தொகுதியில் 10 படகுகள் 50 அடி நீளமானவை. அவை விநியோகப் பணிகளை மேற்கொள்பவை.

மேலும் 30-40 தற்கொலைப் படகுகளும் அவர்களிடம் உண்டு. படையினரின் கடல் நடமாட்டங்களை விடுதலைப் புலிகள் ஜப்பானில் தயாரிக்கப்பட்ட ராடார்களின் உதவியுடன் அவதானித்து வருகின்றனர்.

தற்காப்பு போரையே நடத்தி வருகின்றோம் என விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கடந்த வாரம் தெரிவித்துள்ளார். விடுதலைப் புலிகள் முகமாலை நாகர் கோவில் முன்னரங்கு, மன்னார் மற்றும் ஓமந்தை மேற்குப் பகுதிகள், மணலாறு போன்ற மூன்று முனைகளில் தற்காப்புச் சமரில் ஈடுபட்டு வருகின்றனர்.

மன்னார், மடுவிற்கு மேற்குப் பகுதியில் படையினரின் நடவடிக்கைகளை தடுப்பதற்கு விடுதலைப் புலிகள் அதிகளவான உறுப்பினர்களை பயன்படுத்தி வருகின்றனர். இது அவர்களின் நகர்வுகளை மட்டுப்படுத்தியுள்ளது. படையினர் மணலாற்றில் புதிய களமுனையை திறக்கும் திட்டத்தைக் கொண்டுள்ளனர். ஏற்கனவே அங்கு மோதல்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

விமானப் படையினர் தற்போது முல்லைத்தீவுப் பகுதிகளில் தொடர்ந்து தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றன. படையினர் வன்னியை நோக்கி முன்நகர்வதற்கு முன்னர் விடுதலைப் புலிகளை பலவீனமாக்கும் முயற்சி இதுவாகும்- என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

போதனா வைத்தியசாலையில் கட்டாக்காலி நாய்கள் தொல்லையால் நோயாளர் சிரமம்

நாவற்குழி,செப்.25

யாழ்.போதனா வைத்தியசாலையில் நோயாளர்களின் விடுதிகளை அண்டிய பகுதிகளில் கட்டாக்காலி நாய்கள் அதிகரித்துள்ளன. இதனால் நோயாளர்களும், பொதுமக்களும் சிரமங்களை எதிர்கொள்வதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

விடுதியின் வாயிலின் அண்மையாக கூட்டமாக நிற்கும் இவைகள் நோயாளர்களுக்கு மட்டுமன்றி பார்வைக்காக வரும் பொது மக்களுக்கும் தொல்லை கொடுக்கின்றன.

அத்துடன் விடுதி வாயில்கள் எங்கும் நாய்களின் மலக்கழிவுகள் காணப்படுகின்றன. இதனால் சுகாதாரச் சீர்கேடு நிலவுவதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே இவ்விடயத்தில் சம்பந்தப்பட்டோர் கவனமெடுத்து இவற்றைக் கட்டுப்படுத்த வேண்டும் என நோயாளர்களாலும் பார்வையாளர்களாலும் வேண்டுகோள்விடுக்கின்றனர். (202-288)

துண்டுவிழும் தொகையைக் கட்டுப்படுத்த அரசின் செலவினத்தைக் குறையுங்கள்

சர்வதேச நாணய நிதியம் கொழும்புக்கு எச்சரிக்கை

கொழும்பு,செப். 25

இலங்கை அரசு தனது செலவினத்தைக் குறைத்து வரவு-செலவுத் திட்டத்தின் துண்டுவிழும் தொகையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவேண்டும்.

-இவ்வாறு இலங்கை அரசுக்குத் தெரிவித்திருக்கும் சர்வதேச நாணய நிதியம் நாட்டின் கடன்தொகை அதன் தேசிய உற்பத்தியின் அளவை மீறி எக்கச்சக்கமாக உயர்ந்துவிட்டது என்றும் எச்சரித்திருக்கின்றது.

இந்தப் பிராந்தியத்தில் முதலீட்டுக் கட்டமைப்பு இலங்கையில்தான் மிக மிகக் குறைவு என்பதோடு அரசின் செலவினமும் இங்குதான் மிக உயர்வு என்றும் சர்வதேச கடன் வழங்கும் மையமான சர்வதேச நாணய நிதியம் தெரிவித்திருக்கின்றது.

பொதுத்துறை முதலீட்டுச் செலவீனத்தை அதிகரிக்கும் அதேசமயம் துண்டுவிழும் நிதி அளவைக் குறைப்பதன்மூலம் பொருளாதாரச் செயற்பாட்டில் நிதி முக்கியத்துவத்தைக் குறைத்து இலங்கையின் பொருளாதார வளர்ச்சியை சாதக நிலைக்குக் கொண்டுவரலாம்.

கடந்த 10 வருடங்களுக்கு மேலாக துண்டுவிழும் தொகையை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8 வீதம் முதல் 9.5 வீதம் வரை மிக உயர்வாகப் பேணிவரும் இலங்கையில், அதேசமயம் அரச செலவினம் கடந்த தசாப்த காலத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 35 வீதமாகவும் கணக்கிடப்பட்டிருக்கின்றது.

இலங்கையில் மொத்த முதலீட்டுக் கட்டமைப்பு இந்தப் பிராந்தியத்திலேயே மிக மிகக் குறைவு. அதேசமயம் தற்போதைய அரசின் செலவினமோ மிக மிக உச்சம் என்றும் நிதியத்தின் அறிக்கை தெரிவித்துள்ளது.

இ.தொ.காங்கிரஸின் எம்.பிக்கள் சம்பளமின்றி திரிசங்கு நிலையில்!

கொழும்பு, செப்.25

வீறாப்புடன் அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சர் பதவிகளை இராஜினாமாச் செய்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எம்.பிக்கள், கடந்த இரண்டு மாதங்களாக எம்.பிக்களுக்கான சம்பளமும் இல்லாமல், அமைச்சர்களுக்கான வேதனமும் இல்லாமல் இரண்டும் கெட்டான் நிலையில் அல்லாடுகிறார்களாம்!.

அமைச்சுக்கும் நாடாளுமன்றத்திற்கும் மாறிமாறி அலைந்தும் இவர்களுக்கான சம்பளம் எங்கும் கிடைக்கவில்லையாம்.

தமது அமைச்சுப் பதவிகளை இராஜினாமாச் செய்த இவர்கள் அமைச்சின் பக்கம் போவதில்லை.

இவர்களின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான சம்பளத்தைப் பெற நாடாளுமன்றத்திற்குச் சென்றால், இங்கே உங்களுக்கு சம்பளத்தை வழங்க முடியாது என்கிறார்கள். உங்களுடைய அமைச்சுப் பதவிகளை நீங்கள் இராஜினாமாச் செய்தமை தொடர்பான உங்களது கடிதங்கள் ஜனாதிபதியால் ஏற்கப்பட்டு அது குறித்து எமக்கு அறிவிக்கப்பட்டால்தான் உங்களை எம்.பிக்களாகக் கருதி நாம் வேதனத்தைத் தரமுடியும். அதுவரை உங்களை அமைச்சர்களாகவே நாம் கருதமுடியும். ஆகவே உங்களுக்குரிய அமைச்சுக்குப்போய் சம்பளத்தைப் பெறுங்கள் என்று அங்கு கூறப்பட்டதாம்.

அதேவேளை இவர்கள் தத்தமது பழைய அமைச்சுகளுக்குச் சென்றால் நீங்கள் அமைச்சர் கடமையில் இருக்கின்றீர்கள் எனக் கையெழுத்து வையுங்கள். சம்பளம் தருகின்றோம்.இல்லாவிட்டால் சம்பளம் வழங்க முடியாது! - என்று அங்கு கைவிரித்து விட்டனராம்.

அமைச்சுப் பதவிகளை இராஜினாமாச் செய்தவர்களுக்கு அமைச்சர்களுக்கான சம்பளமும் இல்லை; நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பளமும் இல்லை என்ற இக்கட்டு நிலை.

அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்ட நிலையில் சம்பளமின்றி அவதிப்படுகின்றனராம் அவர்கள். (சி)

NSB

தன்னியக்க இயந்திரம் (ATM) மூலம் பணப் பரிமாற்றல் ஆரம்ப வைபவம்



1972 ஆம் ஆண்டிலிருந்து யாழ்ப்பாணத்தில் வாடிக்கையாளர்களின் நலன்கருதி பலதரப்பட்ட சேவையாற்றிவரும் **தேசிய சேமிப்பு வங்கி யாழ்ப்பாணம் கிளை** இன்று முதல் **தன்னியக்க இயந்திரம் (ATM)** மூலம் பணப்பரிமாற்றம் செய்யும் வசதியை வாடிக்கையாளர்களுக்கு வழங்கவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் **மாணிக்கம் நடராஜசுந்தரம்** (முகாமைத்துவ பீடம்) அவர்களால் 25.09.2007 (இன்று) காலை 9 மணிக்கு உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படும்.

சிறப்பு விருந்தினராக திரு.என்.நவநீதன் (Engineer, Transmission- North) கலந்து கொள்வார் என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

சலுகைகள்:- தேசிய சேமிப்பு வங்கியின் ATM வசதியுடைய ஏனைய 90 கிளைகளுடனும் பணப்பரிமாற்றம் செய்துகொள்ள முடியும்.

- ஒரு ATM அட்டையில் 10 கணக்குகளை நடைமுறைப்படுத்த முடியும்.
- ஒரு கணக்கில் ஒரு தடவையில் 40,000/- ரூபாவை மீளப்பெற முடியும்.
- எனவே 10 கணக்குகளில் 400,000/- ரூபா மீளப்பெறும் வசதி.
- பணம் மீளப்பெறுவதற்கு மேலதிக கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.
- விண்ணப்பங்களை வங்கி அலுவலக நேரத்தில் வங்கியில் பெற்றுக்கொள்ள முடியும். ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் வங்கியில் ATM அட்டையைப் பெற்றுக் கொள்ளலாம்.
- தேசிய சேமிப்பு வங்கியின் இவ்வரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சேமிப்புக்களை அதிகரித்துப் பயன்களைப் பெற்றிடுங்கள்.

முகாமையாளர்,

தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்.

(P 53490)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பு கட்டணச் சலுகை

IBMS

கணனிக் கற்கைநெறிகள் புதிய பிரிவுகள் ஆரம்பம்

பிரிவு I : 12.09.2007
பிரிவு II : 15.09.2007
பிரிவு III : 28.09.2007
பிரிவு IV : 29.09.2007
பகல் 10.00 மணி

Diploma in Microsoft Office - 3 Months 1000/=
Diploma in Dest Top Publishing -3 Months 1000/=
Diploma in Internet Technology -3 Months 1500/=
Dip. in Hardware Engineering -3 Months 2000/=

INSTITUTE OF BUSINESS MANAGEMENT STUDIES

209, மானிப்பாய் வீதி, வைத்தீஸ்வராச்சந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 8060

கிளை : சங்கத்தானை, சாவகச்சேரி

45ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 20 ✱ 06 ✱ 1979

ஆண்டவன் அடியில் 12 ✱ 08 ✱ 2007

அமரர் தம்பிஐயா சந்திரமோகன்

(உரிமையாளர்: பிரிந்தா தொலைத்தொடர்பு நிலையம், பிரிந்தா மணப்பந்தல் சேவை)

எம் அன்புச் செல்வம் சந்திரமோகனே!
எம்மைவிட்டு எங்கு சென்றாய்!
சொல்லாமல் கொள்ளாமல் - சடுதியாய்
நீ சென்ற மர்மம்தான் - என்ன?
கண்ணயர்ந்து போனாலும்
கலையவில்லை உன் உருவம்!
ஊன் இன்றி உறக்கம் இன்றி
துடிதுடித்துத் தவிக்கின்றோம்
நடமாடும் வீடுதனில் - நீ
படமாகிப் போனாலும்
எம் ஜீவன் உள்ளவரை
அழியாது உன் நினைவு.

கைதடி தெற்கு, கைதடி. (64994)

உன் பிரிவால் துயருறும்: குடும்பத்தினர்.

தசாக கிருஹயக்ஞ அழைப்பு

அன்னையின் மடியில் 10 ✱ 11 ✱ 1939

ஆண்டவன் அடியில் 17 ✱ 09 ✱ 2007

நிகழும் சர்வசித்து வருடம் ஆவணி மாதம் 31ஆம் நாள் (17.09.2007) திங்கட்கிழமை பூர்வபக்ஷ ஷஷ்டித்திதி அன்று மாலை அமரத்துவம் அடைந்த எமது அன்புத் தாய்

திருமதி முத்துக்குமாரசாமிக்குருக்கள் சோமாவதியம்மா

அவர்களின் தசாக கிரியைகள் கீழ்க்காணும் தினங்களில் பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி ஆலய இல்லத்தில் நடைபெறும்.

தசாகம் - 26.09.2007 புதன்கிழமை மு.ப. 10 மணி
ஏகோதிஸ்டம் மாசிகம் - 27.09.2007 வியாழக்கிழமை மு.ப. 10 மணி
சபிண்டீகரணம் - 28.09.2007 வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணி
கிருஹயக்ஞம் மதியபோசனம் - 30.09.2007 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணி

தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் சமுகம் தந்து பிரார்த்தனையிலும் 30.09.2007 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

விசவத்தனை முருகமூர்த்தி கோயிலடி, பண்ணாகம்.
T.P.: 0776577446, 0773223108 (66099)

மு.ரவிக்குருக்கள்.

ஒடுகள் திருட்டு

சுழிபுரம்,செப்.25

காளிகோயிலடி, மூளாய் வீதி குடிசன நெருக்கம் நிறைந்த இடத்தில் திருத்தம் செய்யப்பட்ட வீடுகளின் முகட்டு ஒடுகள் களவாடப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட வீடுகளின் திருத்தங்கள் யாவும் செய்யப்பட்டு, விரைவில் குடியிருக்க ஏற்ற ஏற்பாடுகள் நடைபெற்று வந்தவேளையில் இத்திருட்டு நடைபெற்றுள்ளது.

வீட்டுச் சொந்தக்காரர்கள் இல்லாத வேளையில் திட்டமிட்டு மிகக் கச்சிதமாகத் திருடப்பட்டுள்ளது. அயலில் வாழ்பவர் யாருக்கும் தெரியாதவாறு திருட்டு நடைபெற்றுள்ளது. (203- 28)

யாழ்.பல்கலையில் குறும்படக்காட்சி

நல்லூர்,செப்.25

யாழ்.பல்கலைக்கழக வெறுவெளி நாடகக் குழுவினர் குறும்படக் காட்சி ஒன்றை நாளை புதன்கிழமை தொடக்கம் எதிர்வரும் முதலாம் திகதி திங்கட்கிழமை வரை யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடத்தவுள்ளனர்.

அசாதாரண சூழலில் வாழும் மனிதனின் நிலைகளைச் சித்திரிக்கும் 'வெட்டை' மற்றும் 'காவி' ஆகிய திரைப்படங்கள் திரையிடப்படவுள்ளன. அனுமதியை முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளுமாறு கேட்கப்படுகின்றது. (203-111-79)

நுண்கலை வகுப்புகள் சனிக்கிழமை ஆரம்பம்

நல்லூர்,செப்.25

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தினால் எதிர்வரும் சனிக்கிழமை நாவலர் மணி மண்டபத்தில் நுண்கலை வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் இந்தப் பயிற்சி வகுப்புகளில் பண்ணிசை, வாய்ப்பாட்டு, வயலின், மிருதங்கப் பிரிவுகள் இடம்பெறவுள்ளன.

இந்தப் பயிற்சிகளில் கலந்து பயன்பெற விரும்புபவர்கள் நாவலர் மணிமண்டபத்தில் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (203-111-79)

யோகாசன வகுப்புகள்

நல்லூர்,செப்.25

இந்துகலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகம் நடத்தும் இலவச யோகாசன வகுப்புகளின் புதிய பிரிவு எதிர்வரும் முதலாம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும்.

ஆண்கள், பெண்கள், நோயாளர்கள் என மூன்று பிரிவாக நடத்தப்படும் இந்த யோகாசன வகுப்புகளில் இணைய விரும்புபவர்கள் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். (203-111-79)

கட்டாக்காலிகளினால் நெற்பயிர்கள் நாசம்

சங்கானை,செப்.25

சில்லாலை தெற்கு, தும்பளப்பாய் வெளிக்குளத்தை அண்டிய நெல்வயல்களில் சாந்தைக் கிராமப்பகுதிகளில் இருந்து வரும் கட்டாக்காலிகளினால் நெற்பயிர்கள் நாசம் செய்யப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

பெருந்தொகைப் பணத்தினைச் செலவு செய்து வயலைப் பண்படுத்தி விதைப்பினை மேற்கொண்டபோதும் உரிய விளைச்சலைப் பெறமுடியாது என விவசாயிகள் விசனமடைந்துள்ளனர்.

குறித்த வயற்பகுதிகளில் கட்டாக்காலிகளின் தொல்லையால் சிறுபோகப் பயிர்ச்செய்கையான எள்ளு, உழுந்து போன்ற சிறுதானியப் பயிர்ச்செய்கைகள் கடந்த பல வருடங்கள் முற்றாக கைவிடப்பட்ட நிலையில், பெரும்போகப் பயிர்ச்செய்கையும் இவ்வருடம் பாதிக்கப்படும் நிலை தோன்றியுள்ளது. (203-29)

கோழிக்குஞ்சு விற்பனை

புறொயிலர் குஞ்சு உடன் விற்பனைக் குண்டு. அத்துடன் Prima சிவப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சு பதிவு செய்யப்படும். (66116)

நல்லூர் பாம், 19, முருகேசர் லேன், நல்லூர்.

யா/தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி தெல்லிப்பழை

தரம்-1இற்கான அனுமதி - 2008

எமது பாடசாலையில் தரம் - 1 அனுமதிக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களை பாடசாலையில் பெற்றுக்கொள்ளலாம். ஏனைய வகுப்புகளுக்கும் [illegible] அனுமதிகள் வழங்கப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தினம்: 31.10.2007

(66121) அதிபர்.

31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 23 ✱ 03 ✱ 1931

உதிர்வு 27 ✱ 08 ✱ 2007

திருமதி அரியரட்ணம் ஜெகதீஸ்வரி

கடந்த 27.08.2007 அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் நாளை (26.09.2007) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெறவுள்ளது.

அத்தருணம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கிறோம்.

மெமோறியல் லேன், மானிப்பாய். (66084)

மகள், பேரப்பிள்ளைகள்.

தசாப்த நினைவஞ்சலி

தோற்றம் 30 ✱ 08 ✱ 1926

மறைவு 14 ✱ 10 ✱ 1997

அமரர் கந்தையா குலசேகரம்பிள்ளை J.P.

திதி: சதுர்த்தசி

பத்து ஆண்டுகள் பாய்ந்து ஓடின
பந்தபாசங்கள் பதைத்து வாடின
இன்று இங்கு கூடுவது உங்கள் தசாப்தம்
நன்று நாம் நாடுவது உங்கள் சகாப்தம்
மறக்கமுடியவில்லை மனச்சுமைகளை
இறக்கமுடியவில்லை இன்ப நினைவுகளை
வாழ்வுக்கு வழிவகுத்த வள்ளல் ஐயா நீங்கள்
தாழ்வுக்குத் தடைதந்து தலைநிமிர்ந்தோம் நாங்கள்
ஆறுதலைக் கண்டோம் உங்கள் ஆன்ம தரிசனத்தில்
தேறுதலைக் தேடுகிறோம் தெய்வம் உங்கள் திருமுகத்தில்
அழுதாலும் தொழுதாலும் ஐயாவே ஆறுதல் பெற
விழுபளையாள் துணையோடு வீடு பெற வாழ்த்துகிறோம்.

பழமுதிர்ச்சோலை, நாகர்கோயில் றோட், எழுதுமட்டுவாழ்.
த.மு. மானிப்பாய் றோட், உரும்பிராய்.

குடும்பத்தினர். (66072)

31ஆம் நாள் நினைவலைகள்



அமரர் K.S.ஐயாத்துரை

(ஓய்வுபெற்ற சிறாப்பர் [SHROFF] மன்னார், கோப்பாய், சாவகச்சேரி பிரதேச செயலகங்கள்)

பிறப்பு 01✱08✱1945

இறப்பு 26✱08✱2007

திதி: சர்வசித்து வருடம் ஆவணி மாதம் 9ஆம் திகதி பூர்வபட்ச திரயோதசி

"அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்"

"விஜிதா", பருத்தித்துறை வீதி, கொடிகாமம். (66088)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

சமாதானப் பேச்சுக்குப் புலிகள் எப்போது தலையசைப்பார்கள்?

இராணுவ நடவடிக்கைத் தீர்வில் - போர்வெறி முனைப்பில் - தீவிரமாக இருக்கின்றது கொழும்பு அரசு.

தென்னிலங்கை அரசின் சார்பில் படை நடவடிக்கைகளை வழிப்படுத்துபவராகவும், முப்படைகளின் சிரேஷ்ட தளகர்த்தரான ஜனாதிபதிக்கு அடுத்து, நாட்டின் பாதுகாப்புத் துறையில் அதிக அதிகாரமும் செல்வாக்கும் மிக்கவராகத் திகழ்பவரும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான கோத்தபாய ராஜபக்ஷ தமது சொற்கள் மூலமும் செயல்கள் மூலமும் தமது அரசின் யுத்த வெறித் தீவிரத்தைத் தொடர்ந்து வெளிப்படுத்தி வருகின்றார்.

அமைதிப் பேச்சுக் குறித்து - சமாதான முயற்சிகள் பற்றி - அவர் விடுத்திருக்கும் ஓர் அறிவிப்பை சமாதான சமிக்ஞையாகவும், அமைதி எத்தனங்களுக்காக நீட்டப்படும் ஒலிவ் இலை போலவும் அர்த்தம் கற்பித்து சில செய்தி ஊடகங்களும், இணையத்தளங்களும் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

உண்மையில் அது தமிழர் தரப்புக்கு நீட்டப்பட்ட நேசக் கரம் அல்ல. விலங்கு மாட்ட உங்கள் கைகளை நீங்களே நீட்டுகின்றீர்களா, இல்லையா என்று தமிழரைப் பார்த்து விடுக்கப்பட்ட மிரட்டல் அழைப்பே அது.

நாட்டின் தலைவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இலங்கை நேரப்படி இன்றிரவு நியூயோர்க்கில் ஐ. நா. பொதுச் சபைக்கூட்டத்தில் உரையாற்றவிருக்கையில் சமாதானத்துக்கான அழைப்பு என்ற பெயரில் அடிமை சாசனத்துக்கான அறைகூவல் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரால் விடுக்கப்பட்டிருக்கின்றது.

''பேச்சுக்கு வருகின்றீர்களா? இல்லையா? இல்லையேல் போர்தான்!'' - என்று கடும்தொனியில் அமைந்த அவரது அறிவிப்பை சமாதானத்துக்கான அழைப்பு என்பதைவிட யுத்தத்துக்கான அறைகூவல் என்று குறிப்பிடுவதே பொருத்தமானது.

''தங்களுக்கு எதிரான இராணுவத் தாக்குதல்களைத் தவிர்ப்பதற்குப் புலிகளுக்கு இது கடைசிச் சந்தர்ப்பம். தங்களின் வலுவான வன்னித் தளத்தைப் பாதுகாப்பதற்காக யுத்தத்துக்குப் போவதா அல்லது பேச்சு மேசைக்குத் திரும்புவதா என்பதைத் தீர்மானிக்க வேண்டிய நிலையில் புலிகள் இருக்கின்றார்கள்!'' - என்றும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

ஆக, அரச ஆணைப்படி அரசுடன் சமரசம் செய்து அடங்கிப் போவதற்காகப் புலிகள் பேச்சு மேசைக்குத் திரும்பாவிட்டால் வன்னி மீது பெரும் தாக்குதல் நடவடிக்கைத்திட்டம் முன்னெடுக்கப்படுவது மிகமிக உறுதி என்பதைத் தெளிவுபடுத்தியிருக்கின்றார் பாதுகாப்புச் செயலாளர்.

அத்தோடு, மற்றொரு விடயத்தையும் அவர் தெளிவுபடுத்தியிருக்கின்றார். புலிகளின் ஆயுதங்களைக் களைவதில் அரசு மிக உறுதியாக உள்ளது. அதைத் தவிர வேறு மாற்று வழியோ, மார்க்கமோ அரசுக்கு இல்லை என்பதையும் அவர் தெளிவாக எடுத்துக்கூறியிருக்கின்றார்.

அரசின் இராணுவ நடவடிக்கை அச்சுறுத்தலுக்கு அடிபணிந்து, ஆயுதங்களைக் கைவிட்டு, அடங்கி, ஒடுங்கி, அமைதிப் பேச்சு மேசைக்கு வரும் புலிகளோடு சமாதானம் பேசி, இனப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு விடலாம் என மனப்பால் குடிக்கின்றது போலும் கொழும்பு.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கடந்த மூன்று தசாப்த கால அரசியல் விடுதலைப் போராட்ட வரலாற்றை உற்று நோக்குபவர்கள் இருவழித் தடத்தில் அது நகர்ந்து செல்வதைக் காண்பர்.

ஒன்று - வன்முறைப் புயல் வீசும் கொடூரப் போர்க்களமாக விரிகின்றது.

மற்றது - அரசியல் தந்திரோபாயங்களும் இராஜதந்திர சாணக்கியமும் அரங்கேறும் அமைதிப்பேச்சு அரங்குகளாக மேடையேறுகின்றது.

இரண்டு தடங்களிலுமே புலிகளின் தந்திரோபாயங்களும், உத்திகளும், மதிநுட்பமான காய்நகர்த்தல்களும், தேவைப்படும் சமயங்களில் மாயமாகும் நழுவல்களும், பல சமயங்களில் இறுக்கமான பிடிவாதங்களும் எதிரிகளைக் கிறங்கடிக்க வைப்பவை; பதில் நடவடிக்கையாக என்ன செய்யலாம் என்று தெரியாமல் எதிர்த்தரப்பை மலைக்கச் செய்பவை.

ஆனால் இந்தப் போரியல் நகர்வுகளாகட்டும் அல்லது அமைதி முயற்சி அரங்குகளாகட்டும் எதிலும் ஈடுபடுமுன்னர் புலிகள் தமது நிலைப்பாட்டில் ஓர் உறுதியான தெளிவை ஏற்படுத்திக் கொண்டுதான் அடுத்த நகர்வுக்குச் செல்வார்கள்.

இலங்கை அரசுப் படைகள் இப்போது பல முனைத் தாக்குதல்களைப் புலிகள் மீது தொடுத்து, அவர்களைச் சீண்டி, சினத்தில் ஆழ்த்தியுள்ள இந்தப் பின்னணியில் கூடப் புலிகள் இன்று அமைதி காக்கின்றார்கள் என்றால் அதற்குச் காரணம், உறுதியான - தெளிவான - சமய, சந்தர்ப்பமும், சூழலும் தமக்குப் பொருந்தி வரவேண்டும் என அவர்கள் பார்த்திருப்பதுதான்; காத்திருப்பதுதான்.

அதுபோலவே, அமைதிப் பேச்சு அரங்கத்துக்கு அவர்கள் வருவதாயின் அதற்கு முன்னர் அந்த அமைதிப் பேச்சு அரங்கில் தாம் பலமாக நிற்பதற்கான இராணுவச் சமவலுத் திறன் தங்களுக்குச் சாதகமாக இருக்கின்றதா என்பதைப் புலிகள் தெளிவுபடுத்தி உறுதிப்படுத்திய பின்னரே அதில் இறங்குவார்கள்.

இராணுவ வலுச்சமநிலை தங்களுக்குச் சாதகமாகவும் தெளிவாகவும் இல்லாத நிலையில் -

போரியல் விவகாரங்களில் பின்னடைவுகளைக் கண்டு வலுச் சமநிலை சீர்குலைந்த நிலையில் -

புலிகள் அமைதிப் பேச்சு முயற்சிக்கு இணங்கி - இறங்கி - போனார்கள் என்ற சரித்திரமே கிடையாது.

ஆகவே, இராணுவ வலுச் சமநிலையின் உச்சியில் நின்று கொண்டு தாம் பேசுகிறார் எனக் கருதிக்கொண்டு, வன்னிப் பெருந்தளத்துக்குள்ளேயே புகுந்து புலிகளின் முதுகை முறிக்கப்போகின்றார் என்ற எண்ணத்தோடு, பாதுகாப்புச் செயலர் விடுக்கும் இந்த அழைப்பைப் புலிகள் கருத்தில் கூட எடுக்க மாட்டார்கள் என்பது திண்ணம்.

இதன் அர்த்தம், அமைதி முயற்சிகளுக்குப் புலிகள் வர மாட்டார்கள் என்பதல்ல. அவர்கள் சமாதான எத்தனத்துக்கு வருவார்கள். அமைதி முயற்சிகளுக்குத் தாங்களாகவே அழைப்பு விடுப்பார்கள். ஆனால், இராணுவ ரீதியில் தமது வலிமையை மீண்டும் ஒரு தடவை சர்வதேசத்துக்கும் கொழும்புக்கும் உணர்த்திய பின்தான் அது நடக்கும் என்று நிச்சயமாக நம்பலாம்.

குடாநாட்டில் டெங்குக் காய்ச்சல் பல இடங்களிலும் பரவி வருகிறது

3நாள்களுக்கு மேல் காணப்பட்டால் இரத்தப் பரிசோதனை அவசியம்

யாழ்ப்பாணம்,செப்.25

குடாநாட்டில் டெங்குக் காய்ச்சல் வேகமாகப் பரவும் ஆபத்து உருவாகியுள்ளது. நகரப் பகுதிகளில் மட்டுமன்றி கிராமப் பிரதேசங்களிலும் பலர் டெங்கு நோயினால் பாதிப்புற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.நகரப் பகுதி, சுன்னாகம், உடுவில் ஆகிய பகுதிகளில் டெங்குக் காய்ச்சலின் தாக்கம் அதிகமாகக் காணப்படுவதாக பிராந்திய பதில் தொற்று நோயியல் வைத்திய அதிகாரி திருமதி ஜே.ரி.சிவசங்கர் தெரிவித்தார்.

இதேவேளை,

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்றுவரை 10 பேர் டெங்கு நோய்க்காகச் சிகிச்சைபெற்று வருகின்றனர். சிறுமி ஒருவர் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஒருவர் மரணம்

கடந்த மாதம் இக் காய்ச்சலினால் 13 பேர் பாதிக்கப்பட்டிருந்தனர். அவர்களில் ஒருவர் மரணமானதாகவும் தொற்று நோயியல் வைத்திய அதிகாரி சுட்டிக் காட்டினார்.

இந்நோயின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த மக்கள் விழிப்புணர்வுடன் செயற்படவேண்டும் என்றும்-

வீட்டுச் சுற்றாடலில் தண்ணீர் தேங்காது சுகாதாரம் பேணவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

மூன்று நாள்களுக்கு மேல் காய்ச்சல் காணப்பட்டால் வைத்திய சாலைக்கு உடனடியாகச் சென்று சிகிச்சை பெறுவதோடு இரத்த பரிசோதனையும் மேற்கோள்ளவேண்டும் எனவும் அவர் அறிவுறுத்தி உள்ளார்.

இதேவேளை குடாநாட்டில் நேற்று முதல் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை டெங்கு வாரமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(அ-203)

காயத்திரி சித்தர் மகா சமாதி



காயத்திரி பீடச் சித்தர் ஆர். கே. முருகேசு சுவாமிகள் நேற்று மாலை சென்னையில் மகா சமாதி அடைந்தார்.

நுவரெலியா ஸ்ரீலங்காதீஸ்வரர் ஆலய ஸ்தாபகரான் காயத்திரி சித்தர், இலங்கை மற்றும் தமிழகத்தில் இந்து மக்களால் பெரிதும் மதிக்கப்பட்ட சித்த ஞானியாவார்.

சமாதி நிலையில் அடக்கம் செய்யப்படுவதற்காக அவரது புகழுடல் சென்னையிலிருந்து நுவரெலியாவுக்கு எடுத்துவரப்படவுள்ளது. (சி)

பூரணை நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,செப்.25

யாழ். பகவான் ஸ்ரீசத்திய சாயி சேவா நிலையத்தில் போயா ஆன்மீக நிகழ்வுகள் நாளை புதன்கிழமை அதிகாலை 5.15மணிக்கு நகர சங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகி நண்பகல் நாராயண சேவையுடன் பூர்த்தியாகும்.(1)

* * *

யாழ்ப்பாணம்,செப்.25

அகில இலங்கை திருமுறை மன்றம் மாதாந்த பௌர்ணமித் தினத்தில் நடத்திவரும் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப்பாராயணம் நாளை புதன்கிழமையும் நடைபெறும். அன்று காலை 7.30மணி முதல் வண்ணார் பண்ணை வடகிழக்கு ஸ்ரீகாளியம்பாள் தேவஸ்தானத்தில் மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறும். (1)

* * *

யாழ்ப்பாணம்,செப்.25

தாவடி, கொக்குவில் ஸ்ரீஇராம கிருஸ்ண சமித்தியின் ஏற்பாட்டில் பூரணை விழா நிகழ்வுகள் நாளை புதன்கிழமை காலை 9மணிக்கு சமித்தி மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

சமித்தியின் செயலாளர் சி.சிவமோகன் சுவாமி விவேகானந்தரின் அறைகூவல் என்னும் தலைப்பில் ஆன்மீக உரை நிகழ்த்துவார். (1)

நாளை

புரட்டாதி - 9	புதன்கிழமை 26.09.2007
திதி : பூரணை	பின்னிரவு 01.54
நட்சத்திரம் :	பூரட்டாதி பிற்பகல் 04.15
சுபநேரம்	04.32 - 06.02
ராகுகாலம்	12.00 - 01.32

மாநகர சபையைக் கலைக்கவேண்டாம்; கொழும்பில் ஊழியர் சத்தியாக்கிரகம்

கொழும்பு,செப். 25

கொழும்பு மாநகர சபையைக் கலைக்கவோ அல்லது அதன் செயற்பாடுகளை நிறுத்தவோ வேண்டாம் எனக்கோரி மாநகரசபை ஊழியர்கள் நேற்று சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தவறு செய்தவர்கள் தண்டிக்கப்படவேண்டும் என்றும் மாநகர சபையின் செயற்பாட்டில் கைவைக்க வேண்டாம் என்றும் அவர்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கொழும்பு மாநகரசபைக்கு முன்பாக காலை 10.30 மணிமுதல் 11.00 மணிவரை இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

''மாநகர சபையைக் கலைக்க வேண்டாம்'', ''குற்றம் செய்தவர்களைத் தண்டி'', ''மாநகரசபை நிர்வாகத்தில் கை வைக்காதே'' போன்ற வாசகங்களைக் கொண்ட பதாகைகளையும் அவர்கள் ஏந்தியிருந்தனர்.

அந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கருத்துக் கூறுகையில், ''கொழும்பு மாநகர சபையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல் மோசடிகள் தொடர்பாக இப்போது விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. பல சுற்று விசாரணைகள் முடிவடைந்துள்ளன. விசாரணையின் முடிவில் குற்றம் செய்தவர்கள் இனம் காணப்பட்டு தண்டிக்கப்படவேண்டும். அதுதான் முறை. ஆனால், அதற்குப் பதிலாக சபையைக் கலைக்க அல்லது சபை நடவடிக்கைகளை முடக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதை நாம் அனுமதிக்க முடியாது'' - இப்படித் தெரிவித்தனர்.

நாளை

யாழ்ப்பாணம்,செப். 25

கோப்பாய் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் இலவச மருத்துவ முகாம் நாளை காலை 9 மணிக்கு புத்தூர் புத்த கலட்டி சிறிவிஷ்ணு வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

லயன்ஸ் வலயத் தலைவர் ஸ்ரீ பிரகாஷின் விஜயத்தை ஒட்டி ஏற்பாடு செய்யப்படுள்ள இந்த முகாமில் வைத்திய பரிசோதனைகளும் மூக்குக் கண்ணாடி வழங்கலும் இடம்பெறவிருக்கின்றன. (1)

* * *

சங்கானை,செப்.

வலி.மேற்குப் பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் அனுசரணையுடன் இந்து அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு நாளை புதன்கிழமை காலை 8.30 மணிமுதல் சங்கானை பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சங்கானை பிரதேச செயலர் திருமதி தே.பாபு தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வலிமேற்கு பிரதேச செயலகப் பிரிவில் இயங்கும் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களைக் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (1)

குடும்பஸ்தர் எண்மர் நேற்றுச் சரண்

யாழ்ப்பாணம்,செப்.25

உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து குடும்பஸ்தர்கள் எண்மர் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலகத்தில் நேற்று சரணடைந்துள்ளனர்.

வரணி, புலோலி, சரசாலை, கற்கோவளம், கெருடாவில் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த முறையே 24, 29, 38, 33, 23 ஆகிய வயதுகளையுடைய குடும்பஸ்தர்களே சரணடைந்தவர்களாவர். அவர்களைப் பாதுகாப்பாகத் தங்கவைப்பதற்கான ஏற்பாடுகளை மனித உரிமை ஆணைக்குழு மேற்கோண்டுள்ளது.

அதேவேளை, ஏற்கனவே சரண அடைந்து வீடு சென்ற கொடிகாமத்தைச் சேர்ந்த 58 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் மீண்டும் நேற்றுச் சரண் அடைந்துள்ளார். (அ-50)

பதிவாளர் பணிமனைப் பணிகள் வலி.தெற்கிற்கும் விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம்,செப்.25

உடுவில் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பிறப்பு, இறப்பு, விவாகம் தொடர்பான பதிவேடுகள் நாளைமறுதினம் பிரதேச செயலரிடம் கையளிக்கப்படவுள்ளன.

யாழ்.மாவட்ட மேலதிக மாவட்டப் பதிவாளர் திருமதி எம்.இராசரத்தினம் இத்தகவலைத்தெரிவித்தார்.

பதிவேடுகள் கையளிக்கப் பட்ட பின்னர் உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மக்கள் அடுத்த மாதம் முதலாம்திகதி தொடக்கம் தமக்குரிய பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுச் சான்றிதழ்களை அங்கேயே பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

கோப்பாய், சாவகச்சேரி, தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், சங்கானை, வேலணை, கரவெட்டி ஆகிய ஏழு பிரதேச செயலகங்களுக்கும் பதிவாளர் பணிமனைப் பணிகள் ஏற்கெனவே பன்முகப்படுத்தப்பட்டிருந்தன. இப்போது உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. (அ-1)

இன்று வல்லிபுர ஆழ்வார் ஆலயத் தேர்த்திருவிழா

வல்லிபுர மச்சவதாரனே...

வல்லிபுரத்தானே வந்துதவி தாரவேன் கண்ணா
பல்லவித்துயர் பாடுகிறோம் பாராதிருப்பதேனோ கேசவா
வல்வினைபோம் துன்பம்போம் என்பர் எம்மாதவா
எம்மின துன்பந்துயர் துடைக்கவா நீலவண்ணா!

மனோகரா.

தேரேறி வரும், துன்பங்கள் தீரும்!

வல்லிபுரப் பதியதனில் வந்தமர்ந்த சக்கரனே
வல்வினை களைபவரே வல்லவரே ஆழ்வாரே
சல்லாரி உடன்சங்கு ஒலிசேர்ந்து செவி நுழைய
சூழமுன் அடியார்கள் சேர்ந்துனையே கூவி நிற்பர்
தொல்லைகளால் தாயகமும் கண்ணீரில் மூழ்கிறதே
தூயவனே திக்கெட்டும் தேரமர்ந்து பாராயோ
செல்லுமிடம் தடை நீக்கி உளமெல்லாம் களிப்புறவே
சேதியொன்று நாளைநீ நீராடிப் பகர்வாயா?

அல்வையூர் கே. ஆர். திருத்துவராஜா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிகாயங்களுடன் சாரதி மீட்கப்பட்டார்

யாழ்ப்பாணம், செப்.25

யாழ். அரசடி வீதியில், ஐந்தாம் ஒழுங்கையில் நேற்றுமாலை அடிகாயங்களுடன் மீட்கப்பட்ட சாரதி ஒருவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த வி.பத்மநாதன் (வயது51)என்பவரேகாயமடைந்தவராவார்.

காயமடைந்தவரின் வீட்டுக்குச் சமீபமாக அவரின் கார் தீக்கிரையாக்கப்பட்டிருந்தது. அந்தக்காருக்குச் சமீபமாக அவர் அடிகாயங்களுடன் மீட்கப்பட்டார்.

(அ-1-78)

விபத்தில் மூதாட்டி மரணம்

யாழ்ப்பாணம், செப். 25

புத்தூர் கிழக்கு, செக்கத்திடல் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் 'லான்ட் மாஸ்டர்' வாகனத்தில் இருந்து வீழ்ந்த வயோதிபப் பெண் ஒருவர் யாழ். ஆஸ்பத்திரியில் மரணமானார்.

அதே இடத்தைச் சேர்ந்த நாகமுத்து அன்னபூரணம் (வயது 63) என்பவரே உயிரிழந்தவராவார். (1-78)

இந்தியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அணி 158ஓட்டங்களைப்பெற்றது.தொடர்ந்து ஆடியபாகிஸ்தான்அணி 153ஒட்டங்கள் பெற்றநிலையில் சகலவிக்கெற்றுக்களையும் இழந்தது.

ஆட்டத்தின் கடைசி ஓவர், இரு அணிகளுக்கும் பலப் பரீட்சையாக இருந்த போதிலும் இந்தியா வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது. (அ-1)

யாழ்.சட்டத்தரணிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்வர் எனவும் அவர் கூறினார்.

சட்டத்தரணிகள் நேற்று நடத்திய ஒன்று கூடலைத் தொடர்ந்து நீதிபதிகளான இ.த.விக்னராஜா, க.அரியநாயகம், திருமதி ச.இளங்கோவன் ஆகியோரை அழைத்து சந்திப்பொன்றையும் நடத்தினர். அதன் போது தமக்கு ஒத்துழைப்பு வழங்கிய நீதிபதிகளுக்கு நன்றியும் தெரிவித்தனர் என சங்கத் தலைவர் மேலும் தெரிவித்தார்.(202)

தமிழரின் சுய நிர்ணய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான பிரதிநிதிகள் குழு நியூயோர்க்கில் கூடியுள்ளது.

கடந்த முறைகளைப் போலவே இம் முறையும்- தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை பயங்கரவாதமாகச் சித்தரித்துக் கொச்சைப்படுத்தவும் -

இலங்கை அரசின் மனித உரிமை மீறல்கள் தொடர்பான தவறுகளையும், மனிதநேயப் பணிகளுக்கு எதிரான செயற்பாடுகளையும், அமைதி நடவடிக்கைத் தோல்விகளையும் மூடிமறைத்து சர்வதேசத்தைத் தவறாக வழி நடத்தவும்-

இந்தப் பொதுச் சபைக் கூட்டத்தை இந்தப் பிரதிநிதிகள் குழு பயன்படுத்தும்.

சர்வதேச விவகாரங்களைப்பற்றி விவாதிப்பதற்காக 62ஆவது ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் உலகத் தலைவர்கள் கூடியிருக்கும் இச்சமயத்தில் இலங்கையின் தற்போதைய பிணக்கு நிலை குறித்தும் அமைதி நடவடிக்கை குறித்தும் கவனத்தைச் செலுத்தச் செய்ய தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு விரும்புகின்றது.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை திட்டமிட்டு பலவீனப்படுத்தியது

நேரடியாக சர்வதேச சமூகத்துடன் தொடர்பாடல் செய்யும் வாய்ப்பு தமிழர்களுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் மறுக்கப்பட்டிருப்பதால் இந்த அறிக்கையை நாம் முன்வைக்கிறோம்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதிகாரத்துக்கு வந்த காலம் தொடக்கமே, இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சர்வதேச ஆதரவுடன் உருவாக்கப்பட்ட யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை திட்டமிட்டுப் பலவீனப்படுத்தி வந்துள்ளார்.

ஜெனீவாப் பேச்சில் வழங்கப்பட்ட உறுதிமொழிகளை அப்பட்டமாக அது (அரசு) புறந்தள்ளி நிராகரித்துவிட்டது.

மேலும், யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் ஒரு தரப்பான தமிழீழ விடுதலைப் புலிகளை சர்வதேச சமூகத்திலிருந்து தனிமைப்படுத்த இலங்கை அரசு எடுத்த முயற்சிகள் மூலம், சர்வதேச சமூகத்துடன் தமிழர்கள் நெருங்கிப் பழகிப் புரிந்துணரும் வாய்ப்பைத் தடுத்து, பிணக்கை நியாயமான முறையில் தீர்க்கும் வகையில் தமது அபிலாஷைகளை சர்வதேச சமூகத்துக்கு எடுத்துரைக்கும் தமிழரின் வாய்ப்பையும் அது குழப்பிவிட்டது.

அத்தோடு 'புலிகளை முற்றாக அழித்தல்', 'அதன் மூலம் தமிழருக்கு அரசியல் தீர்வு வழங்கல்', 'பேச்சு மேசைக்குப் புலிகளைக் கொண்டு வருவதற்கு அவர்களைப் பலவந்தப்படுத்தும் விதத்தில் புலிகளைப்பலவீனப்படுத்துதல்' - என்றெல்லாம் இலங்கை அரசு பிதற்றல் அறிக்கைகளைவிட்டுக் கொண்டிருக்கின்றது.

பிணக்குத் தீர்வாக அரசமைப்புக் கட்டமைப்பு ஒன்றைக் கொண்டுவரும் பெயரில் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு அமைக்கப்பட்டமை இலங்கை அரசின் பொய் வேடத்துக்கு பொருத்தமான மற்றோர் உதாரணமாகும்.

'அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு', 'வட்டமேசை' என்று பிரச்சினைத் தீர்வுக்குக் குழுக்களை அமைப்பது தொடர்ந்து வந்த அரசுகளினால் பின்பற்றப்பட்டு வந்த நடிப்புப் பண்புகளே.

அனைத்துக் கட்சிக் குழு குறித்து தவறான நம்பிக்கை

ஆனால், சர்வதேச சமூகத்தின் சில அங்கத்தவர்கள் தற்போதைய அனைத்துக்கட்சிக் குழு குறித்து நம்பிக்கை வெளியிட்டதோடு அது பிரச்சினைக்குத் தீர்வாக சிறந்ததொரு கட்டமைப்பைக் கொண்டுவரும் என எல்லோரும் உறுதி கூறியும் வருகின்றனர். ஆனால், இந்தத் தவறான நம்பிக்கை இன்று வரை ஆக்கபூர்வமான பெறுபேறு எதனையும் கொண்டு வரவேயில்லை.

ஆனால், மறுபுறத்தில் இலங்கை அரசின் தலைவர்கள் இராணுவ வெற்றிகள் குறித்து நச்சுக் கருத்துக்களை வெளியிட்டு வெற்றி அணி நடைகளை நடத்திக்கொண்டிருக்கின்றார்கள்.

அத்தோடு பயங்கரவாதத்துக்கு எதிரான சர்வதேச நிலைப்பாட்டை, உள்நாட்டில் தமிழர் தேசத்துக்கு எதிரான தனது போருக்கான நியாயமாகச் சமப்படுத்திக்காட்டிக் கொண்டிருக்கிறது இலங்கை அரசு.

இந்தவரிசையில் முக்கியமான - குறிப்பிடத்தக்க - சான்றாக அமைவது, செப்ரெம்பர் 14ஆம் திகதி திருகோணமலையில் தமது சகோதரரான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நிகழ்த்திய உரையாகும். அது தேசிய தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பானது.

''பயங்கரவாதிகளுக்கு எதிரான போரில் அரைவாசி அல்லது மூன்றில் இரண்டு பங்கு வெற்றி கொள்வதன் மூலம் நாம் நிலையான சமாதானத்தை ஸ்தாபிக்க முடியாது. புலிகளின் பயங்கரவாதம் நூறுவீதம் ஒழிக்கப்படாவிட்டால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வடக்கு, கிழக்குக்குத் தாம் விரும்பும் அரசியல் தீர்வை நடைமுறைப்படுத்த முடியாது'' - என அவர் கூறுகின்றார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் தெளிவாக அங்கீகரிக்கப்பட்ட இரண்டு விடயங்களை இதிலிருந்து புரிந்து கொள்ள முடியும்.

முதலாவது - வடக்கு, கிழக்கில் இலங்கை அரசு தனது யுத்த நடவடிக்கையைத் தீவிரப்படுத்த எண்ணியுள்ளது.

அடுத்து - அனைத்துக்கட்சிப் பிரதிநிதிகள் குழு என்பது சர்வதேச சமூகத்தை முட்டாளாக்கும் வேலை.

மேற்படி கருத்துக்களை சிங்களத்தில் தொலைக்காட்சி ஊடாக நாட்டு மக்களுக்குப் பிரகடனப்படுத்திய அரசு, ஒரு வார காலத்துக்குள் ஐ.நா. பொதுச சபைப் பிரதிநிதித்துவத்தின்போது சர்வதேச சமூகத்துக்கு அமைதிப் பேசசுக் குறித்து உதட்டளவில் நடிக்கப்போகின்றது.

-என்று இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'தமிழ் மக்களுக்கு எதிரான இன அழிப்பு', 'தமிழீழ விடுதலைப் புலிகளும் சமாதான முயற்சிகளும்' என்ற தலைப்புக்களில் இந்த அறிக்கையில் இடம் பெற்ற ஏனைய விடயங்கள் உதயனில் பின்னர் வெளிவரும். (அ-உ)

பொஸ்கோவிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மிகப் பெரும்பாலானவை அதிலிருந்து தமது முடிவுகளைப் பெற்றனர்.

உத்தியோகபூர்வமான பரீட்சை முடிவுகளை, விமானம் மூலம் அனுப்புவதற்காகத் தபால் திணைக்களத்திடம் நேற்று மாலை கையளிக்கப்படவிருந்ததாக பரீட்சைத் திணைக்களம் அறிவித்திருந்ததாகவும் -

அவ்வாறு கையளிக்கப்பட்டிருந்தால் இன்று இங்கு வந்து சேரும் என்று - யாழ். கல்வித் திணைக்கள அதிகாரி தெரிவித்தார். (அ-1)

சரணடைவோரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழுவினர் கேட்டறிந்தனர்.

தற்சமயம் யாழ். சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ள, சரணடைந்தவர்களை தனியான இடம் ஒன்றில் வைத்துப் பராமரிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். அவர்களுக்கு அடிப்படைத் தேவைகளை வழங்க யுனிசெவ் உதவவேண்டும் என்று நீதிவான் கேட்டுக் கொண்டார்

சரணடைந்துள்ள பெண்கள் மற்றும் சிறுவர்களை வந்து பார்வையிட குடும்ப உறுப்பினர்களோ அல்லது உறவினர்களோ இல்லாததால், அவர்கள் பல அத்தியாவசிய வசதிகள் இன்றி கஷ்டப்படுகின்றனர். அவர்களுக்குத் தேவையான உதவியை வழங்க ஏற்பாடு செய்யுமாறும் நீதிவான் தூதுக் குழுவினரிடம் கேட்டுக் கொண்டார்.

சரண் அடைந்து உள்ளவர்களை நேரில் சந்தித்து அவர்களின் தேவையை அறிந்து நடவடிக்கை எடுப்பதாக ஜோண் தெரிவித்தார்.

சரணடைந்தவர்கள் இப்போது தங்க வைக்கப்பட்டுள்ள சிறைச்சாலைக்கும் அரச சிறுவர் இல்லத்துக்கும் இக்குழு நேரில் சென்று அவர்களைச் சந்திக்க நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

உயிர் அச்சுறுத்தல் காரணமாக ஒன்பது சிறுவர்கள் உட்பட 126 பேர் நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது (அ-1)

ஆசிரியர் வே.அன்பழன் அவர்களின் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2008 வகுப்புகள் ஆரம்பமாகின்றன

யாழ்ப்பாணத்தில்	சாவகச்சேரியில்
அன்பொளி கல்வியகம்	அன்பொளி கல்வி நிலையம்
யாழ். இந்துக் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்	தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.

அனுமதிகளை 26.09.2007 புதன்கிழமைக்கு முன்பு பி.ப. 2 மணி தொடக்கம் பி.ப. 5 மணிக்குள் முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

மேலதிக விவரங்கள், நேர அட்டவணை நேரில் வழங்கப்படும்.

(66397) இயக்குநர்கள்.

இன்று விற்பனையில்

சுடர் ஒளி THE SUDAR OLI

செப்.16 - 22 இதழ்

★ மனித உரிமை மீறல் குற்றச்சாட்டு: இலங்கை தப்பிப் பிழைக்குமா?
★ மு.காவின் தெரு விளக்கு அரசியல்
★ அதிகார வர்க்கத்தின் அநுபக் கரங்களை அம்பலப்படுத்தியவர்.
★ குடாநாட்டில் குடும்பப் பதிவு! கொள்ளை லாபம் அடிக்கும் சூரர்கள் பாடு கொண்டாட்டம்!!
★ மிக் விமான விவகாரங்களும் பார்க்க மறந்த பங்கங்களும்
★ தரம் 4 மாணவருக்கான கல்விச் சுடர் 2 வர்ணப் பக்கங்களில்
★ காங்கிரஸ் கட்சியுடன் விஜயகாந் கூட்டணி
★ குழப்பத்தில் பாகிஸ்தான்!
★ எரியும் பூமிப்பந்து

மற்றும் பல சுவையான, வழமையான அம்சங்களுடன்.

உதயன் விற்பனை முகவரிடம் கேட்டு வாங்குங்கள்

இன்று விற்பனையில்

S.L.A.S. போட்டிப் பரீட்சை வகுப்புகள் நடைபெறுகின்றன

★ புதன்(26.09) 11-2 மணிவரை நடைபெறும்.
பிரிவு I ஒவ்வொரு சனியிலும் 11-2.00
பிரிவு II ஒவ்வொரு வியாழனும் 1-4.00
விரும்பிய பிரிவில் இணையலாம்.

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாக)

பொருளியல் கருத்தரங்கு
A/L 2007 Day, 2008, 2009
By: P.சண் (B.com[Hons]Dip.in.Edu.)

ஆரம்பம் : 26.09.2007 Wed

6.30	- 9.00	நீரு (கோண்டாவில்)
9.30	- 12.00	வினைல்ஸ்(சுன்னாகம்)
12.30	- 3.00	பிறைற்மன்(நீராவியடி யாழ்.நகர்
3.30	- 6.00	பிற்ஸ்மன்(மானிப்பாய்

விடயம் : உற்பத்தி சாத்திய வளயி

✱ விடுமுறை நாள்களில் தொடர் கருத்தரங்கு

மரண அறிவித்தல்கள்

கனகசபைக்குருக்கள் திருஞானசம்பந்தக் குருக்கள்

குருக்கள் பகுதி, கரணவாய் கிழக்கு, கரவெட்டியைச் சேர்ந்த கனகசபைக் குருக்கள் திருஞானசம்பந்தக் குருக்கள் நேற்று சிவபதமடைந்துவிட்டார்.

அன்னாரின் சிவபதக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (25.09.2007) செவ்வாய்க்கிழமை இடம்பெற்று பூதவுடல் முற்பகல்10 மணிக்கு கிராய் இந்து மயானத்தில் தீயுடன் சங்கமமாகும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தி.மாணிக்கவாசகர்
பொறுப்பதிகாரி, வலி.கிழக்கு பிரதேச சபை உப அலுவலகம், அச்சுவேலி.

திருமதி ஜோசப் பார்வதி

அளவெட்டி தெற்கைச் சேர்ந்த ஜோசப் பார்வதி 22.09.2007 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் ஜோசப்பின் அன்பு மனைவியும் இராசமலர் (நுவரெலியா), விசுவநாதன் (பஹ்ரைன்), சாவித்திரி(நுவரெலியா), ஜெகநாதன், சகீலா, ஜெயக்குமார், யோகராணி (நுவரெலியா) ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அளவெட்டிதெற்கு, அளவெட்டி. (66150)

தகவல்: கணவர், பிள்ளைகள், மருமக்கள்.

சின்னத்தம்பி பத்மநாதன் (மாத்தையா)

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் பூநாறிமர ஒழுங்கை, கொக்குவில் மேற்கை வதிவிடமாகவும்கொண்ட சின்னத்தம்பி பத்மநாதன் 21.09.2007 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் மனோன்மணியின் அன்புக் கணவரும் சசிகுமார், சசிகலா, அஜிந்தன ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(26.09.2007) புதன்கிழமை முற்பகல்10மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பூநாறிமர ஒழுங்கை, கொக்குவில். (66149)

தகவல்: குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் அவர்களினால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.09.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org